
உ

# கந்தசட்டிப்புராணம்



நா. சிவசுப்பிரமணியசிவாச்சாரியார்

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
சிலாபம், இலங்கை.

உ
சிவமயம்

# கந்தசட்டிப் புராணம்


ஆசிரியர்:

யழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை

நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்

பதிப்பாசிரியர்:

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்

B.A.(Hons.), P.G.Dip.in Edu., M.Phil.

விரிவுரையாளர்

சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வெளியீடு

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்

முன்னேஸ்வரம்

சிலாபம்

2014

நூல் : கந்தசட்டிப்புராணம்

ஆசிரியர் : ச.பத்மநாபன்
விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பக்கங்கள் : xix + 97

முதற்பதிப்பு : 1895

மீள்பதிப்பு : 2014

பதிப்புரிமை : ஆசிரியர்

கணினி வடிவமைப்பு : இ.இளங்கீரன், புங்குடுதீவு.

அச்சுப் பதிப்பு : மதி கலர் பிறிட்டேர்ஸ்

வெளியீடு : ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.

**ISBN 978 - 955 - 0877 - 15 - 7**

# பதிப்புரை

ஈழத்துப் புராண மரபில் விரத புராணங்கள் தனித்துவமானவை. ஈழத்தில் சிறப்பாக யாழ்ப்பாணத்து சைவத்தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திழைத்த கலாசாரம் கந்தபுராண கலாசாரமாகும். கந்தபுராணத்துக் கலாசாரத்தில் மேன்மைபெறும் சைவமரபில் முருகவழிபாடு தனித்துவமானதாக விளங்குகின்றது.

இந்துசமய விரதமரபில் கந்தசஷ்டி விரதம் மிகவும் முக்கியத்துவமுடையதாகும். இக் கந்தசஷ்டி விரதத்தினைப் புராணமாகப் பாடிய பெருமைக்குரியவர் வட்டுக்கோட்டை வரகவி பிரம்மஸ்ரீ நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் ஆவார். இவர் 1848.07.30 இல் பிறந்து 1929.10.10 இல் இறைபதமெய்தி 81 ஆண்டுகள் வாழ்ந்தவர். சுன்னாகம் வரதபண்டிதருக்கு நிகராகப் பல்வேறு விரதபுராணங்களையும், புராணங்களையும் பாடியுள்ளார்.

அவற்றுள் தென்கோயிற்புராணம் ஏட்டு வடிவிலிருந்து நூல் வடிவில் வெளிவரவிருக்கின்றது. கந்தசட்டிப்புராணம் இரண்டாம் பதிப்பாக 119 வருடங்களுக்குப் பின்னர் அதேவடிவில் வெளிவருவது குறப்பிடத்தக்கது. மிக அருகியதும், சிதிலமடைந்தும், பாதுகாக்கப்பட வேண்டியதுமான இந்நூலை அவ்விதமே பதிப்பித்து, அவர் தம் வாழ்க்கை வரலாற்றை இணைத்து வெளியிட்டு வைப்பதில் பெருமையடைகின்றேன்.

எனது தாய்வழிப் பாட்டனாரின் இந்நூல் ஈழத்து இலக்கிய மரபிலும், புராணமரபிலும், விரத மகிமைகூறும் சமயநூல் வரிசையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இத்தகைய அருகிவரும் அரிய நூல்களின் வெளியீட்டின் மூலம் சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பேணிப்பாதுகாக்கப்படுவது மனங்கொள்ளத்தக்கதொன்றாகும்.

**ச.பத்மநாபன்**<br>
***விரிவுரையாளர்,***<br>
***சம்ஸ்கிருதத்துறை,***<br>
***யாழ்.பல்கலைக்கழகம்.***

***பிரதான குருவும் தர்மகர்த்தாவும்,***<br>
***ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,***<br>
***முன்னேஸ்வரம்,***<br>
***சிலாபம்.***

***15.01.2014***

# கந்தசட்டிப் புராணம்

## (ஈழத்துப் புராணங்கள் என்னும் நூலில் இருந்து)

நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைப் பிறந்தகமாகக் கொண்டவர். அடைக்கலங்கோவை, இராமேசர் வெண்பா, அருச்சுனன் நாடகம், சுபத்திரை நாடகம் முதலிய நூல்களையியற்றிய இ.நாகேசையரவர்களின் மகனாக 1849 ஆம் ஆண்டளவில் பிறந்தனர் என்ப. நாகேசையரவர்களின் தந்தையாகிய சு.இராமசாமி ஐயரவர்கள் அல்லிநாடகம் முதலியவற்றை இயற்றியவராவார். வட்டுக்கோட்டை மு.சிதம்பரப்பிள்ளை ஆசிரியரின் மாணாக்கராவர். சிவசுப்பிரமணிய சிவாசாரியார் கந்தசட்டிப் புராணத்திற்குச் சாற்றுகவி பாடியவர்களிற் சிதம்பரப்பிள்ளையாசிரியரும் ஒருவராவார். சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர் 1929 ஆம் ஆண்டு மரணத்திரையான் மறைக்கப்பட்டனர்.

முருகனை வேண்டியியற்றப்படும் கந்தசட்டி விரதத்தின் மான்பினையும் அவ்விரதத்தை நோற்கும் முறையினையும் அவ்விரதத்தாற் பயன்பெற்றோர் சரிதைகளையும் இந்நூலிற் காணலாம். சூராதிகள், பார்க்கவி, இந்திரன், அகத்தியர், தெய்வயானை முதலியவர்களின் சரிதங்கள் ஈண்டு இடம்பெறுகின்றன.

சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர் இப்புராணத்தினைச் சூத முனிவர் மாதவருக்கு உரைப்பது போன்று நடத்திச்செல்கிறார்.

ஆதியாயணுவாயறிவாயொளிர்
சோதிதாள்பணிசூதமுனிவரன்
மாதவத்தர்மனமகிழ்வெய்தவே
நீதிசால்கந்தசட்டிநிகழ்த்துவான்

(கந்தசட்டிச் சருக்கம்,1)

என்னும் பாவினைப் போன்ற பாக்கள் பல இவ்வியல்பினை உணர்த்தி நிற்கின்றன. ஆசிரியர் புராணத்திற்கு முதனூலாகக் கொண்டனவற்றை மேல்வருஞ் செய்யுள்கள் விளம்பா நிற்கின்றன.

அருள்பொழிசனவுனகாதியருந்தவர்க்குவந்துசூதன்
தெருள்வழிந்தொழுகச்சொற்றதிருவளர் புராணமாகும்
பொருள்வழிகாந்தத்துள்ளும்பொருவில் பல்லாகமத்தும்
இருளழியடியார்கோட்டியிசைத்திடு பனுவலுள்ளும்.
கருதரும்விரதராசங்கவுத்துபமாதியாக
விரிபலவிரதங்கூறுமேன்மைசானூல்களுள்ளுங்

குருகுலாமவுணற்செற்றகுமரவேள்கந்தசட்டித்
தெரிகதைநியதியாவுந்திரட்டிநன்பொருள்செறித்தே.

(முகவுரை 1 - 2)

இந்நூல் அரங்கேறிய காலத்தை மேல்வருஞ் செய்யுள் சுட்டுகின்றது.

புண்ணியகந்தசட்டிப்புராணமாயிரத்தொ டெண்ணூ
றெண்ணியசகாத்தமேழிசைமீனமத்தநாளில்
வண்ணநீளிலங்கைவட்டூர்வளர்தெக்கிணா லயத்துக்
கண்ணலிங்கேசர்முன்னர்க்கவின்ற ரங்கேறிற்றன்றே.

(முகவுரை, 7)

கந்தசட்டிப் புராணத்திலே காப்புச் செய்யுளொன்றும் வாழ்த்துச் செய்யுளொன்றும் கடவுள் வாழ்த்துப்பாக்கள் மூன்றும் முகவுரைப் பாடல்கள் ஏழும் நீங்கலாகக் கந்தசட்டிச் சருக்கம் முதலாக கந்தசட்டி வரைவுறுத்த சருக்கம் ஈறாகவுள்ள எட்டுச் சருக்கங்களிலே 998 செய்யுள்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை வே.சதாசிவப்பிள்ளையவர்கள் கந்த சட்டிப் புராணத்தைச் சென்னையிலே தாம்சன் கம்பனியாரின் வெ.நா.ஜுபிலி யந்திரசாலையில் 1895 ஆம் ஆண்டு பதித்துள்ளார்.

சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர் நூல்கள் பலவற்றையும் தனிப்பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளார் எனத் தெரிகின்றது. நூலாசிரியராக விளங்கியதோடமையாது, பதிப்பாசிரியராகவும் இவர் காணப்படுகிறார். தென்கோயிற்புராணம், விநாயகசட்டிப் புராணம், ஏகாதசிப் புராணம் முதலிய புராணங்களையும் இவர் பாடியுள்ளார். தென்கோயிற்புராணம், விநாயக சட்டிப் புராணம் ஆகியன அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஏகாதசிப் புராணம் அச்சிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் அந் நூற்பிரதிகள் கிடைக்குமாறில்லை. நல்லூர் கைலாசநாதர் பேரில் ஒரு புராணம் பாடியுள்ளார் என்று கூறுவர். அந்நூலும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

மேலும் சைவபுராணத்தை மொழிபெயர்த்துப் பாடத்தொடங்கி முற்றுவிக்காது தமது எண்பதாவது வயதில் இறையடியடைந்தார் என்பர். புராணங்களேயன்றி வேறு நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் பாடிய சிவமாலை இவருடைய குமாரர் அனந்த சுப்பிரமணிய ஐயரால் யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சியந்திரசாலையில் சார்வரி வருடம் ஆடிமாதம் (1900) பதிப்பிக்கப்பட்டது. வட்டுக்கோட்டை வே.சதாசிவப் பிள்ளை சென்னை ஸ்கொட்டிஸ் அச்சியந்திரசாலையிலே இவரது வெள்ளிக்கிழமை விரதம் என்னும் நூலை சுபானு வருடம் ஆவணி மாதம் (1833) பதிப்பித்தார். இவரது சுப்பிரமணியர் தோத்திர விருத்த

மாகப் பாடப்பட்டு அச்சிடப்பட்டது. தமது தந்தையைப் போன்றும் பேர ணைப் போன்றும் இவர் நாடகத் தமிழிலும் ஈடுபாடுடையவர். இரத்தின சூடவிலாசம், ருக்மாங்கதவிலாசம், வலைவீசு விலாசம் முதலியனவற்றை இவர் இயற்றியுள்ளாரென அறிகிறோம். இவற்றோடு கோயில்கள் பல வற்றிற்கு ஊஞ்சற்பாக்களும் ஆசிரியவிருத்தங்களும் பாவிகற்பங்கள் கொண்ட சரமகவிகளும் பாடியுள்ளார்.

நெல்லைநாதர் பாடிய சிவராத்திரி புராணத்தைச் சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர் "பல ஏட்டுப் பிரதிகளை ஆதாரமாய்க் கொண்டு திருத்திச் சென்னைப் பட்டணத்தில் அச்சிடுவித்தனர்" என்பர் பாலர் சரித்திர தீப கம் எழுதிய அ.சதாசிவம்பிள்ளை அப்பதிப்பிலே பாயிர அத்தியாயம் உட்படவுள்ள ஐந்து அத்தியாயங்களுக்கும் 303 விருத்தங்கள் உண்டென் பர். சதாசிவம்பிள்ளை யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் 1910 ஆம் ஆண்டு வே.சதாசிவம் பிள்ளையவர்களால் இரண்டாம் பதிப்பாகச் சிவ ராத்திரி புராணம் ஒன்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் யாழ்ப் பாணம் வட்டுக்கோட்டை நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர் எனக் கூறப் பட்டுள்ளது.

வட்டுநகர் வாழ்சுப்ர மண்யசிவா சாரியனாஞ்
சிட்டன் கசிதையாற் செய்தளித்தான் - இட்டமொடு
செய்ய வடசொற் சிவராத் திரிபுராணம்
வையகத்திற் செந்தமிழின் மாட்டு

எனச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் சாற்றுகவி பாடியுள்ளார். இப்பதிப்பிலே பாயிரத்திலே ஏழு செய்யுள்களும் சிவநிசிச் சுருக்கம் முதலாகச் சிவநிசிநிருபணச் சருக்கம் ஈறாகவுள்ள ஆறு சருக்கங்களிலே 294 பாக்களும் காணப்படுகின்றன. எனவே பாயிரமுட்பட இப்பதிப்பிலே 301 செய்யுள்கள் உள.

அ.சதாசிவம்பிள்ளை கூறிய சிவசுப்பிரமணிய ஐயரின் பதிப்பில் ஐந்து அத்தியாயங்களில் 303 பாடல்கள் காணப்பட வே.சதாசிவப்பிள்ளை கூறிய சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் நூலிலே ஏழு அத்தியாயங்களிலே 301 செய்யுள்கள் காணப்படுகின்றன.

வே.சதாசிவம்பிள்ளை பதிப்பித்த இரண்டாம் பதிப்பிற்குரிய சிவசுப் பிரமணிய சிவாச்சாரியரின் சிவராத்திரி புராணத்தின் முதற்பதிப்பு கிடைக்கவில்லை. கிடைத்திருப்பின் அம்முதற் பதிப்புக்கு சிவசுப்பிர மணிய சிவாசாரியர் ஆசிரியரா பதிப்பாசிரியராவென்பது தெளிவாகும்.

ஈழகேசரியிலே (12.7.1936) மு.இராமலிங்கமவர்கள் "நெல்லைநாதர் சிவராத்திரி புராணத்தை இவர் அதிகரித்து அச்சிடுவித்தார்" என்று கூறி யுள்ளார். பாடல் எண்ணிக்கை அதிகரித்ததாகத் தெரியவில்லை. சருக்கங்

களே அதிகரித்துள்ளன போலும், பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் எடுத்துக் காட்டும் இரண்டு பாக்களை வே.சதாசிவப்பிள்ளை பதிப்பிலே காணமுடிய வில்லை. அப்பாடல்கள் மேல்வருகின்றன.

மறைதொழுஞ்சிவராத்திரிமான்மியம்
அறிவின்மிக்கவருந்தவர்க்காரிய
முறைசொல்தன்மொழிந்தனனற்றமிழ்த்
துறையிலோதினன்சூழ்நெல்லைநாதனே

அண்டரண்டமழித்துலகேழையும்
கொண்டலேழுங்குரைகடலேழுமே
மண்டியேறிமலைந்தபின்மாதவன்
பண்டுபோலப்படைக்கவென்றெண்ணினான்.

சிவராத்திரி புராணத்திற்குச் சிவசுப்பிரமணிய சிவாச்சாரியர் நூலா சிரியரா அல்லது பதிப்பாசிரியராவென்பது கவனித்தற்குரியதாகும். சிவராத் திரி புராணத்தை வசனரூபமாகச் செய்த வட்டுக்கோட்டை க.குருமூர்த்தி ஐயரவர்கள் நெல்லைநாத நாவலர் இயற்றிய சிவராத்திரி புராணத்தை ஏனைய சிவராத்திரி விரதமகிமை கூறும் நூல்களுடன் கூறுகின்றாரே யொழிய, தமது ஊரினர் சிவசுப்பிரமணிய சிவாசாரியர் இயற்றியதாக வே.சதாசிவப்பிள்ளை கூறும் சிவராத்திரி புராணத்தைக் கூறவில்லையென் பது ஈண்டு நினைவுகூரத்தக்கது.

**உசாத்துணை:**

1. பாவலர் சரித்திர தீபகம். பக். 197 - 198.
2. பாவலர் சரித்திர தீபகம். பக். 38.
3. ஈழகேசரி 12.07.1936 ‘என் காலம் போய்விட்டது’ (15) முருகரம்மான் (மு.இராமலிங்கம்).
   மு.சிதம்பரப்பிள்ளையாசிரியர் பின்பு வில்லியம் நெவின்ஸ் எனப் பெயர்பெற்றார்.
4. ஈழகேசரி 12.7.1936 “என் காலம் போய்விட்டது” - முருகரம்மான் (மு.இராமலிங்கம்)
5. பக். 201: பக் 250

# ஈழகேசரி

## (என்ற 12.07.1936, பத்திரிகையிலிருந்து சிவஸ்ரீ நாவன்னா ஐயர் பற்றிய ஒரு கட்டுரை)

*என் காலம் போய்விட்டது.*
*(முருகரம்மான் எழுவது)*
*சுயம்பாடும் புலவர்கள் (4)*

சிவசுப்பிரமணிய ஐயர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 300 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்து நல்லூரில் அரசாண்ட பரராசசிங்கம் பரநிருபசிங்க அரசரின் மந்திரியாகவிருந்த மகேச ஐயரின் ஐந்தாம் பாட்டனாராகியவரும் நாடகப்புலவரெனப் பெயர்பெற்ற வித்துவான் நாகேச ஐயரின் புத்திரரும் வயிரவ சுவாமியின் அநுக்கிரகம் பெற்றுக் கவிபாடும் திறமைபெற்ற கணபதி ஐயரின் ஆறாம் பாட்டனாருமாகிய இவர் 1849 ஆம் ஆண்டளவில் வட்டுக்கோட்டையில் சிவமறையோர் குலம் சீர்பெறத் தோன்றிய தவநிறை திருமறைச் சைவசிகாமணியென அவதரித்தார். வாழையடி வாழையாக தமது தந்தையாரைப் போலவே இவரும் இயலிசை நாடகமெனு முத்தமிழும் மையலறத் தெரிந்த மாட்சிகொள் புலவரென வட்டுக்கோட்டையில் விளங்கினார்.

ஆரியம், தமிழ், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் விற்பன்னராகி விளங்கியவரும், நியாயலக்கணம், தமிழ்வியாகரணம், ஆங்கில அகராதி முதலிய அநேக நூல்களுக்கு ஆக்கியோனும் வித்துவானுமாகிய மு.சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் (William Nevins) அவர்களிடம் கல்விகற்று வந்து இவர் கவிபாடுந்திறமை பெற்றார். இதுவல்லாமல் அராலியில் பிரபல சோதிடராகி விளங்கிய அப்புக்குட்டிச் சாஸ்திரியாரிடம் சோதிடமும் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார்.

இவர் பாடிய நூல்கள்.

1. தென்கோயிற் புராணம்
2. இரத்தின சூடவிலாசம்
3. கந்தசட்டிப் புராணம்
4. ருக்குமாங்கதவிலாசம்.
5. விநாயக சட்டிப்புராணம்
6. வலை வீசுவிலாசம்
7. ஏகாதசிப்புராணம்
8. சுப்பிரமணிய தோத்திர விருத்தம்
9. சிவமாலை
10. சிவராத்திரிப் புராணம்

11. திருக்கைக் கலியாணம்
12. குருநாதர் கிள்ளை விடுதூது
13. வெள்ளிக்கிழமை விரத வினா விடை.

தென்கோயிற் புராணக் காப்புச்செய்யுள் பின்வருமாறு

"பன்னிய காண்ட மூன்று படலமோர் முப்பதினமே,
லென்னப் பன்னிராயிரத்து நறு நூறு விருத்தச் செய்யுள்
தன்னிற் சீரிலங்கைமான்மியந் தழை தென்கோயிற்புராணங்,
கன்னிகை யருளுமைங்கைக் கற்பகங் கருதிச் சொல்வாம்"

இந்நூல் அச்சேறவில்லை. இரத்தின சூடவிலாசம் அச்சுவேலிக் கடுத்த நெல்லியடியில் விளையாடியது. கந்தசட்டிப் புராணத்திலுள்ள ஓர் செய்யுளை ஈண்டுக் குறிக்கிறோம்.

மருப்பின் னைங்கரனோ மெனுங்
கரி முகன் பொற்கழலினை வாழ்த்தியே
பொருவின் மாகந்தசட்டிப் புராணமெய்
விரவு மாயிரத் தெண்கவி விள்ளுவாம்"

இந்நூல் அச்சிடப்பட்டது. ருக்குமாங்கத விலாசம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலடியில் விளையாடப்பட்டது. விநாயக சட்டிப் புராணத்தில் ஒரு செய்யுள் பின்வருமாறு.

"தழை விநாயக சட்டிப் புராணமெ
யழை யொராயிரத்தறுநூறு விருத்தமேல்
வழை சருக்கமு வேழி நவில்தரக
கழை மதம் பொழி கற்பகம் போற்றுவாம்"

இந்நூல் அச்சேறவில்லை. வலை வீசுவிலாசம் வட்டுக்கோட்டையிலுள்ள வலை வீசும் சாதியரிடம் பாடிக்கொடுத்து அவர்களால் விளையாடப்பட்டது. ஏகாதசிப் புராணத்தில் ஓர் செய்யுளை ஈண்டு குறிக்கிறோம்.

"விற்கொளே காதசி மிகு மான்மியம்,
மேற்கொண்டு முந்நூ றிலங்கு விருத்த மேற்,
சிற்சருக்க மொரைந் திற்றென் கோயில் வாழ்,
கற்பகத்தைக் கருதி விளம்புவாம்"

இந்நூல் அச்சிடப்பட்டது. சுப்பிரமணியர் தோத்திர விருத்தம் எண்பத்து நான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தமாகப் பாடப்பட்டு அச்

சிடப்பட்டது. சிவமாலையின் காப்புச் செய்யுளை ஈண்டுத்தருகிறோம்.

"பொங்கு சிவமலை சொற்போற்று திருத்தெக் கணப்பாய்க்,
கங்கை தரு கற்பகமே காப்பு"


இந்நூல் அச்சிடப்பட்டது. நெல்லைநாதர் சிவராத்திரிப் புராணத்தை இவர் அதிகரித்து அச்சிடுவித்தார். அதன் காப்புச்செய்யுள் பின்வருமாறு.

"இன்பமார் சிவராத்திரி மான்மியம்,
நன் சருக்க மொராறில் நவில்கவி,
அன்புசேரு முந்நூற்றினருடர,
முன்பன் கற்பக முன்னி மொழிகுவாம்"

இவைகளன்றி விராடநாடகம், இந்திரகுமாரநாடகம் முதலிய நாடகங்களைத் திருத்தியவரும் அநேகம் ஆயிரம் கோவில்களுக்கு ஊஞ்சற்பாக்களும் ஆசிரிய விருத்தங்களும் பாவி கற்பங்கள் கொண்ட சமரகவிகளும் பாடித் தன்புகழை நிலைநாட்டினர். நல்லூர் கைலாசநாதர் பேரில் ஓர் புராணம் பாடிமுடித்திருக்கிறார். இதன்பிரதி நல்லூர் சிவன்கோவில் ந.வே.கார்த்திகேயக் குருக்களிடம் இருப்பதாக அறிகிறோம்.

இதுவன்றிச் சைவர்களுக்கு உபயோகமாய் விபூதி உருத்திராக்க மகிமை, சிவாலய தரிசனமுறை, பிரம விஷ்ணுக்கள் உற்பத்தி, உலக உற்பத்தி முதலியவைகளைக் கூறுவதும் பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய சைவமகாபுராணத்தைப் பாடத்தொடங்கி ஆயிரத்துக்கு முன் பின்னான செய்யுளையியற்றி எஞ்சிய பாகத்தை முற்றுவிக்காது தனக்குப் பின் சிறந்த கல்வி மான்களாகிய அநந்த சுப்பிரமணிய சர்மா என்பவரையும் வாலசுப்பிரமணிய சர்மா என்பவரையும் சந்ததியாக விட்டு 1929 ஆம் ஆண்டுக்குச் சரியான விபவ வருடம் ஐப்பசி மாசம் அபரபக்கத்து தியையில் தனது 80 வயதில் இறைவனடி நிழலையடைந்தார்.

இவரும் வட்டுக்கோட்டை வித்துவான் மு.ஆறுமுகம்பிள்ளை உபாத்தியாயரும், கர்ண பாரம்பரியச் சரித்திரங்களை திரு.ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் இயற்றிய யாழ்ப்பாணச் சரிதிரத்திற்கு எடுத்துரைத்தார் களெனக் கூறப்பட்டிருக்கிறது. இவரது மூத்த புத்திரர் அநந்த சுப்பிரமணிய சர்மா அவர்கள் சிறந்த வித்துவானாகவும் ஆயுள்வேத பண்டிதராகவும் வட்டுக்கோட்டையில் விளங்குகிறார். இளைய புத்திரர் வாலசுப்பிரமணிய சர்மா அவர்களே யாழ்ப்பாண வைபவம் என்னும் நூலை இயற் றியவராவார்.



உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தசட்டிப்புராணம்.

இந்நூல் ஆசிரியர்

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை

**நா - சிவசுப்பிரமணியசிவாசாரியர்.**

இதனை

முத்திரீகரிப்பித்துப் பிரசுரித்தவர்

**வே - சதாசிவப்பிள்ளை.**

சென்னபட்டணம்:

வே. நா. ஜூபிலி யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை—ரூபா - உ.

1895.

# சாற்றுகவிகள்.

யாழ்ப்பாணம்

## ஸ்ரீமத் - நா. குமாரசுவாமிக்குருக்கள் சொல்லியது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

## ஸ்ரீமத்-கு. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்சொல்லியது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

## ஸ்ரீமத் - அருணாசலசாஸ்திரியார் சொல்லியது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

வேதாரணியம்—வடக்குத்தெரு

## ஸ்ரீமத் - மு. சிவசுப்பிரமணியக்குருக்கள் சொல்லியது

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

### யாழ்ப்பாணம்-மாதகல் - சைவப்பிரசாரகர்

## ஸ்ரீலஸ்ரீ - சு. ஏரம்பையர் சொல்லியது.

பூமகள்சிரமாப்பொலிவுறுமீழ, மாமெனுமுகத்தினவிரொளிவிரிக்குஞ், சீர்மலிபுகலிச்சிவபிரானிடமா, யோர்மலிபவைதன்னிணைமுலைப்பாலாய், விரவிடுபராபரஞானந்தன்னை, யருளொடுகுழைத்துமுன்னருத்தியதிறத்துப் பரவைநீர்ஞாலம்பற்றியதவத்தால், வரமிகுஞானமருவுசம்பந்த, னாதியாஞ் யகுரவரன்றன்பா,லோதிடுதமிழினுற்றிடுபதிகம்,பேறுறுகேதீச்சரமுடன்பெருமை, யேறிடுகோணசலமெனும்விழியும், சேரியாழ்ப்பாணத்திருநகரதனி, லேர்பெறுகன்னலெழிலுறுசெந்நெல், வளம்பலவுறாஉமிளங்குலைவயலும், பழம்பலபெறாஉம்புன்மலர்ச்சோலையும், வருணாச்சிரமதருமமும்வாழ்வும், அரிணமாமதிலுமழகுறச்சைவ,சிட்டரன்புடனேசிறப்புறாஉம்பெருமை,வட்டுநகரின்வசிப்பவனாதி, அரன்றிருமுகத்தினவதரமுனிவரிற், பயன்பெறுகோத்திரப்பண்புறுசீரும், பேரும்புகழும்பெருமையும்பெற்றோன், ஆரும்வியக்குமரியமூதறிவன், காசிபகோத்திரன்கருதெசுர்வேதன், ஆசிலாவாபத்தம்பசூத்திரத்தோன், கண்டவர்சிரமெனக்கொண்டநாகேச, பண்டிதன்றவத்தாற்பாரிடையுதித்தோன், முன்னூல்விதியின்முறைமையினாலே, முந்நூலணிந்தம்முன்னூலோதிக், கருவினூலனைத்துங்கற்றறிந்தறிவாங், கருவியின்வலிமைகண்டிடுபெரியோன், தருக்கவிலக்கணந்தன்னொடிலக்கியம்,உருக்குறுபுராணமாயுள்ளவுமுணர்ந்தோன், முப்பொருளியற்கைமுழுதறிவுறத்து, மப்பொருட்டாகுமரியவாகமமுங், கற்றறிவல்லவன்கற்றதன்படியே, நிற்றலுமறிந்துநேர்ந்தவர்க்கத்திறஞ், சொற்றலுஞ்சொற்றபடியவர்தம்மைப், பற்றிடச்செய்யும்பகுத்தறிவாளன், நற்குணநற்செயனுடிவிலாசஞ், சொற்குணமறிந்துதுலங்குபூடணம், யாவருந்தலைமேலேந்துறுபதுமம், பாவலர்புகழுந்தேவவிச்வாச, நல்லவரணியுநலம்பெறுசந்தன, மெல்லவர்தமக்குமீயுநன்மாரி, யிறவாப்புகழ்படைத்தேறியபெருமை, குறையாச்சிவசுப்பிரமண்ணியகுரு, தன்பெயர்க்கடவுட்டன்னடிக்கமலம், அன்பொடுபோற்று மறிவுறாஉம்பேழை, யாகியதிறலன்றோ னருட்பிழம், பாகிபகந்தசட்டிநோன்பதுவும், பின்னதனலேபெறும்பயனதுவும், உத்தியாபனமுஞற்றிடுமுறையும், பத்தியின்முடித்தோர்பழையநற்கதையும்,தொகைவகைவிரியாற்றுகளறவாய்ந்து, தகைபெறுகந்தசட்டிப்புராணயாச், சொற்சுவைபொருட்சுவைதுலங்கிடப்புலவர், நற்சுவைகூட்டுணநல்லோர்வியப்பப், பாடியேயுலகிற்பரப்பினன், நாடியேயெவருநன்மையெய்திடவே.

---

## காரைநகர் - ஸ்ரீலஸ்ரீ. மு. கார்த்திகேயையர்சொல்லியது.

மாசிலதாயிலங்குவடபுரத்தின்மேவுமறையவர்சடிலகன்வயங்செழுசீர்மிக்க-
தேசுமலிநாகேசகவிஞன்றந்தசெல்வனெனுஞ்சிவசுப்ரமணியமேலோன் - காசி
னியிலியாவர்களும்வியந்துபோற்றுங்காந்தவடமொழியதனிற்கழருநின்ற-பாச
மறுகந்தசட்டிப்புராணந்தன்னைப்பரிவினொடுந்தமிழ்ப்பாவாற்பகர்ந்திட்டானே.

யாழ்ப்பாணம் - வீட்டுக்கோட்டை
**ஸ்ரீமத் - மு. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் சொல்லியது.**

கந்தவேண்மான்மியஞ்சொல்கந்தசட்டி நூலையுயர்
செந்தமிழானகேசச்செம்மல்சுதன் - புந்தி
சிவசுப்பிரமணியதேசிகனார்தந்தார்
கவிவிற்பனரமிழ்தேகாண்.

---

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதிபதி
**ஸ்ரீமத் - துரை கு. கதிரவேற்பிள்ளை சொல்லியது.**

கந்தசட்டிமாநூலைக்கன்னத்தமிர்தமெனத்
தந்ததமிழ்க்காளிதாசகவி—முந்துசிவ
சுப்ரமணியசிவாசாரியனுன்சூனுசொற்சீர்க்
கொப்புண்டோநாகேசவோது.

---

ஸ்ரீதொண்டமான் புதுக்கோட்டை ஹைகோர்ட்டு மாஜி நியாயாதிபதி
**ஸ்ரீமான் - சி. வை. தாமோதரம்பிள்ளை சொல்லியது.**

போகேசன்முதலாயபுங்கவர்க்குமருங்காஞ்சிப்புரியாற்போந்த
யோகீசன்சரவணபவையனுயர்பௌத்ரன்வட்டுநகரிலோங்கும்
நாகேசவழிப்புலவனல்குசிவசுப்ரமண்யநாவலோனும்
வாகீசன்கந்தசட்டிப்புராணமமிழ்தெனத்தமிழில்வழங்கினனால்.

---

யாழ்ப்பாணம்—சுன்னாகம்
**ம-ள-ள-ஸ்ரீ - அ. குமாரசுவாமிப்பிள்ளை சொல்லியது.**

விண்ணவருந்தொழுங்கந்தசட்டிபுராணந்தமிழில்விருத்தப்பாவாற்
றிண்மைபெறச்சொற்பொருள்சேர்ந்தழகொழுகச்செய்தனன்பூதேவர்கோமான்
உண்மைநெறியறிவுபொறைமுதலாயவணிகளெலாமொருங்குவாய்ந்த
பண்ணவனான்மறைச்சிவசுப்பிரமணியகுருதிலகன்பாவல்லோனே.

---

கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
**ம-ள-ள-ஸ்ரீ எம். ஆர். கந்தசுவாமிக்கவிராயர் சொல்லியது.**

திருமருவும்யாழ்ப்பாணச்செழும்பதியில்வாழ்வுடையான்றிகழுஞ்சீர்த்தி
மருவுசிவாசாரியர்தங்குலத்துதித்தமணியனையான்மகிழ்ச்சியார்க்குந்
தருசிவசுப்பிரமணியநாமமுளான்கந்தசட்டிச்சரிதந்தன்னை
யொருவுதலில்சொற்சுவையும்பொருட்சுவையுமணிநலமுமுலவும்வண்ணம்.

தித்திக்குந்தெள்ளமுதோதீங்கரும்போதேம்பாகோசெழுஞ்செந்தேனோ
புத்திக்குச்செவிவழியாற்புகட்டுமுயர்கனிரசமோபுகல்வீரென்ன
வெத்திக்குப்பாவலருமெடுத்திசைக்கக்கவித்தொடையாவிசைத்தானீது
முத்திக்குவழியாகுமெனநினைந்துபலர்வியந்துமொழியும்வண்ணம்.

அனையதொருதிருநாட்டினவதரித்துக்கல்விநலமன்புவாய்மை
நினையுமுயர்சிவபத்திகுருபத்திநெடிதுடையோனிதந்தன்னெண்ணந்
தனையறிவித்திட்டசதாசிவமென்னும்பெரும்பெயரான்றானன்பாகப்
புனையுமச்சிறப்பதித்தெவர்க்குமகிழ்ச்சிதனைத்தந்துநலம்பொருந்தினனே.

உ

# கையொப்பக்காரர் பெயர் வருமாறு.

## யாழ்ப்பாணம்.

ஆ - இரகுநாதமுதலியார்-வலிகாமம்.
[மேற்குமணியம்.
ஆ - வேலுப்பிள்ளை.
மு - வயித்தியலிங்கம்.
வ - சின்னத்தம்பி.
வி - கந்தையா.
கு - தம்பையா - கிளேர்க்.
ஆ - கார்த்திகேசு - உபாத்தியாயர்.
வே - நாகநாதர்.
க - வீரகத்தி.
எ - சின்னத்துரை - ஓவசியர்.
ச - நாகநாதர்.
அ - நமசிவாயம்.
க - வயித்தியலிங்கம்.
கு - சின்னப்பா.
வி - அம்பலவாணன்.
மு - சபாபதிப்பிள்ளை.
வ - அம்பலவாணர் - சிறுப்.
வி - முருகேசு - விதானை.
சு. மார்க்கண்டு உடையார்.
சு - கந்தமுத்து.
க - அம்பலவாணன்.
ஆ - பெருமையினார்.
இ - முருகேசு.
மா - செல்லையா.
சு - பொன்னம்பலம் - சிறுப்.
க - செல்லையா.
வி - முருகேசு.
நா - கார்த்திகேசு.
பொ - முருகேசு.
ச - பொன்னையா.
அ - தம்பையா.
வி - மாரிமுத்து உடையார்.
ந - மாரிமுத்து.
ச - கதிரவேலு - நொத்தாரிஸ்.
சு - கதிரவேலு.
ம - சின்னப்பாபிள்ளை.
ஓவசியர் - நாகமுத்து.
வே. முத்துக்குமாரு - ஓவசியர்.
சி - சபாபதிப்பிள்ளை.
இ - கந்தப்பா பிள்ளை.
இ - வயித்தீசுவரையர்.
மு - நடுவில்த்தம்பி - நல்லூர்க் கந்தசு
வாமிகோயிற்றருமகர்த்தா.
ஆ - தம்பிப் பிள்ளை.
ஆ - கிருஷ்ணபிள்ளை - கிளேர்க்.
வி - வயித்தியலிங்கம்.
மு - சுப்பிரமணியம் - கமானியார்.
க - வெற்றிவேலுப்பிள்ளை-நொத்தாரி
ஆ - மயில்வாகனம். [ஸ்
வி - கந்தஞானியார்.
வி - தம்புஐயர்.
க - பரியாரி ஐயர்.
அ - நாகநாதர்.
சிறீ - அ - சுவாமிநாதாசாரி.
ப - நாகலிங்க - ஆ.
அ - வேலாயுத - ஆ.
அ - இராமசுவாமி - ஆ.
வே - ஆறுமுக - ஆ.
சி - வயித்தியலிங்க - ஆ.
மு - சபாபதி - ஆ.
மு - நாகப்ப ஆ.
ஐ - வேலுப்பிள்ளை.
ஆ - அருளம்பலம்.
ச - சிவப்பிரகாசம் - உபாத்தியாயர்.
ச - முத்தையாச் செட்டியார்.
பே - இலங்கைநாயக - முதலியார்
ஹைகோர்ட்.
ச - இராமையாச் செட்டியார்.
வி - வேலுப்பிள்ளை - விதானை
க - கந்தையா - உபாத்தியாயர்.
சி - கிருஷ்ணர்.
சி - அருணாசலம்.
மு - கிருஷ்ணர்.
அ - தம்பிமுத்து.
கா - விநாசித்தம்பி.
மு - சுப்பிரமணியம்.
அ - செல்லப்பா.
வ - சுப்பிரமணியம்.
அ - பரமநாதன்.

# கையொப்பக்காரர் பெயர் வருமாறு.

## சிங்கப்பூர்.

வி - முருகேசபிள்ளை-இன்ஸ்பெக்றர்
V - ஆறுமுகம்-கொன்ருகறர்,
K - வேலுப்பிள்ளை-காஸ்கம்பனி.
வே - சுப்பிரமணியம்- ஓவசியர்
ஆ - கணபதிப்பிள்ளை, ,,
அ - கந்தையா. ,,
கா - சிற்றம்பலம், ,,
சி - மாரிமுத்து. ,,
இ - வயித்திலிங்கம். ,,
M- பொன்னம்பலம். ,,
ச - பொன்னம்பலம். ,,
வ - கதிர்காமு. ,,
வே - இளையதம்பி, ,,
C - நமசிவாயம். ,,
S - முத்துத்தம்பி. ,,
கு - கோவிந்தசாமி. கிளாக்.
V - இராமசாமி. ,,
V - இராமசாமி. ,,
அ - பெ. கிருஷ்ணசாமி. ,,
V - சுப்ருது. ,,
D - ஆசிர்வாதம். ,,
S - சபாபதிப்பிள்ளை. ,,
கா - நாராயணசாமி. ,,
க - செல்லையாபிள்ளை. ,,
அ - இராமலிங்கம். ,,
V. A. Pilly, - டக்றர்.
சாமியார்-சுப்பையன்
முரு - ஆறுமுகம்.
மா - அருளம்பலம்.
சோ - இரகுநாதர்.
க - தில்லைநாதர்-ருவஸைமன்.
கி - துரைசாமி. ,,
G - சவரிமுட். ,,
D - தம்பையா-கிளாக்
ஆவதாரணம்-கோப்றில்.
க - மார்க்கண்டு.
ச. கதிரேசன்.
அ. காளியப்ப உபாத்தியாயர்.
S. M- சபாரத்தினம் ,,
கா - வல்லிபுரம்.
ஆ - கந்தையா.

ஆ - காசனாதா-இன்ஸ்பெக்றர்.
S - D R - சாமி ஓவசியர்.
A - S- பொன்னுசாமி ஆசாரியார்.
மு - நடேசன்.
K - சின்னசாமி-டக்றர்.
பளனியாண்டி சேர்வை.
மு - வயிரவநாதன்.
அங்குச்சாமிருல்.
இ - சுப்பையா-டக்றர்,
இ - முருகேசு கொன்ருகறர்.
சோ - முருகேசு,
புதுவை அ - முனியப்பபிள்ளை,
க - வேலுப்பிள்ளை.
மு - மார்க்கண்டு,
இ - கோபாலசாமி.
மு - பளனியப்பமுதலி.
செ - முத்துராமலிங்கம்.
வி - வேலுப்பிள்ளை,
ச - சின்னப்பா - ருவ்ஸைமன்,
நா - நா- நமசிவாயம்-இன்ஸ்பிறிற்ற
க - மகாலிங்கம்பிள்ளை. ,,
C - P - இராசகிருஷ்ணர், ,,
N - V - சாமி - டக்றர்,
அ - சிதம்பரப்பிள்ளை,
க- வேலுப்பிள்ளை.
ஆ - விசுவநாதன்,
அ - அரு - அருணாசலம்செட்டி,
வீ - மு - வீரப்பச்செட்டி,
வீ - லெ அள- இராமநாதன்செட்டி
வ - மு பள - அடைக்கப்பச்செட்டி
ரு - ம - சி - அழகப்பச்செட்டி,
மு - வி - முத்தப்பச்செட்டி,
அரு - பஅ - முத்துகருப்பன்செட்டி
முத்து - அரு - தேனப்பச்செட்டி,
க - மு - கலங்கப்பச் செட்டி,
வீரு - குப- முத்துகருப்பன்செட்டி
ரும - ப - ருமண்செட்டி,
அ - ரும - கண்ணப்பச்செட்டி
கு - ம - நா - அண்ணாமலைச்செட்டி
வீ - லெ - அருணாசலம்செட்டி,
லெ - வீ - ர - அழகப்பச்செட்டி,

# கையொப்பக்காரர் பெயர் வருமாறு.

அ - அ - சித - சிதம்பரஞ்செட்டி.
கு - ராம - ராம - ராமன்செட்டி,
மு - ராமஅ - ஆண்டியப்பச்செட்டி
பெரி- க வெ - வெள்ளையப்பசெட்டி.
ராம - அரு - அரு - செட்டி,
தீ - அ - ,,
முத்து - கரு - ,,
ராம. நா. நா. மு. ,,
மு - பஅ - சுப்பிரமணியன்செட்டி,
மு ரு க - வீரப்பச்செட்டி,
சவரிமுத்து,
கோவிந்தன்,
சுப்பராயன்,
வீரப்பிள்ளை,
பொன்னுச்சாமி,
காத்தான்,
நாராயணன்,
மாரிமுத்து,
முருகன்,

நாராயணசாமி,
இராமசாமி,
தெக்ஷணாமூர்த்தி,
திருமலைநாயக்கன்,
வெங்கடாசலம்,
கோவிந்தன்,
சாமிநாதன்,
நாராயணசாமி,
இரத்தினசாமி,
கோவிந்தன,
பைக்கிரிசாமி,
பைக்கிரி
கோவிந்தசாமி,
வெங்கடாசலம்,
கறுப்பன்,
இராமசாமி,
பொன்னுச்சாமி
வெங்கடாசலம்,
இராமசாமி,

## வேதாரணியம்.

மா - நாகமுத்தாபிள்ளை.
அ - சிவானந்தபிள்ளை.
க - கணபதிப்பிள்ளை-உபாத்தியாயர்.
நமசிவாயக் குருக்கள்.
அ - சு - அருணாசலபண்டாரம்.
சிதம்பரநாதக்குருக்கள் - மேல்பற்று
[illegible] தியாகராதக்குருக்கள்.
ச - சுப்பையாபிள்ளை - தேவஸ்த்தானம் மானேசர்.
அ - அப்பாக்குட்டியாபிள்ளை.
ஓ - அ - தம்பிசாமிப்பிள்ளை.
இராசகோபாலஐயர் - வைக்கீல்.
ச - சிவசிதம்பரம்பிள்ளை.
சுந்தரேசம்பிள்ளை.
க - அம்பலவாணபிள்ளை.

## கொழும்பு.


சி - மயிலுப்பிள்ளை - சிருப்பு.
க - இராமலிங்கம் - சிருப்பு.
ந சுவாமிநாதபிள்ளை.
க - தம்பையா - சிருப்பு.
த - சுப்பிரமணியம்.
மா - செல்லையா - சிருப்பு.
ந - இரத்தினசபாபதி.
அ - நாகநாதபிள்ளை.
த - சொக்கநாதர்.
அ - குலவீரசிங்கம்.
வி - பொன்னம்பலம்.
கா - மதியாபரணம்.
பொ - கந்தையா.
அ - வயித்தியலிங்கம்.
சி - செல்லையா.
வே - செல்வத்துரை.
ஐ - அம்பலவாணர்.
தி - கைலாசபிள்ளை - கோர்ட்டு முதலியார்.
நன்னித்தம்பி.
நா - சிவப்பிரகாசம்.
சு - ப - ரா - ம - அம்பலவாணன்.
வயிரமுத்து.
க - முத்தம்பலவாணன்.
ராம - இராமசுவாமிநாயுடு.
தி - வீராசாமிப்பிள்ளை.
செ - சுப்பையா.
மூ - தம்பையா.
வே - சங்கரப்பிள்ளை.
மு - திருவிளங்கம்.
அ - சதாசிவம்.
ரா - க - மகராசா.
நா - குமாரசுவாமிக்குருக்கள்.
பெ - லெ - பெ - செட்டியார்.
ரா - ம - அரு - அரு - செட்டியார்.

## கண்டி.

அ - தில்லையம்பலம்.
கோ - சின்னத்தம்பி.
வ . செல்லப்பா.
வி - தம்பிப்பிள்ளை.
க - கந்தப்பா.
ச - கணபதிப்பிள்ளை.
சி - நாகலிங்கம்.
நா - சிவஞானம்.
க - அம்பலவாணர்.
தி - பொன்னம்பலம்.
மு - நாகலிங்கம்.
L. Latton.
ச - சுப்பிரமணியக்குருக்கள்.
ம - செல்லையா.

## சென்னபட்டனம்.

ஜெ - எம் - வேலுப்பிள்ளை.
கா - முருகேசம்பிள்ளை - ஓவசியர்.
வி - சிங்கார முதலியார்.
Bank - சிங்கார முதலியார்.
வே - மாசிலாமணிப்பிள்ளை - Lawer.
க - அம்பலவாண பிள்ளை. [சினீர்.
வே - தெய்வசிகாமணிப்பிள்ளை - இஞ்
ச - சிற்றம்பலம் - ஓவசியர்.



உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தசட்டிப்புராணம்.


இந்நூல் ஆசிரியர்

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை

**நா - சிவசுப்பிரமணியசிவாசாரியர்.**



இதனை

முத்திரிகரிப்பித்துப் பிரசரித்தவர்

**வே - சதாசிவப்பிள்ளை.**

சென்னபட்டனம்:

வே. நா. ஜூபிலி யந்திரசாலையிற்


பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை—ரூபா - உ.

1895.



*All rights reserved.*



உ

கணபதி துணை.

# கந்தசட்டிப்புராணம்.

## காப்பு.

இருமருப்பினனைங்கரனேமெனுங்
கரிமுகன்பொற்கழலிணைவாழ்த்தியே
பொருவின்மாகந்தசட்டிப்புராணநூல்
விரவுமாயிரத்தெண்கவிவிள்ளுவாம்.

## வாழ்த்து.

உலகொளிர்வளஞ்சிறக்கவோங்குகதருமநீதி
நலமலிவைதிகங்களுடருஞ்சைவம்பல்க
நிலைகிளர்பரமஞானநிட்டையினலர்ந்தகோலக்
கலபமாமயில்விளங்குங்கந்தவேள்கருணைவாழ்க.

---

## கடவுள் வணக்கம்.

### சிவபிரான்.

சச்சிதானந்தமுத்ததற்பரவடிவமாகிப்
பச்சிமப்பிறைபுனைந்துபராபரையிடப்பான்மேவ
வச்சிரப்பவளமேனிவதனமைந்தினிதிலங்கும்
முச்சகப்பொருளைச்சைவமுதல்வனைமுன்னுவாமே.

### உமாதேவி.

நீறொளிர்பவளக்குன்றினீங்கலாதகிலநல்கி
ஆறெனுஞ்சமயபேதத்தவ்வவர்பொருளாயன்றாய்த்
தேறருண்மயமாந்தன்மச்செல்வியையிமயமீன்ற
பேறெனவுலகமேத்தும்பிராட்டியைவணங்கல்செய்வாம்.

### சுப்பிரமணியர்.

ஆறுவகைச்சமயமுமுடிவாகியடியாகியப்பாலாகித்
தேறுமெழிற்சித்தாந்தசைவநறுஞ்செழும்பொருளைத்தெளிந்தோருய்ய
ஆறுமுகந்திருமேனியொன்றுடையார்மயிலுடையாரயில்வேலேந்தி
மாறுபடுஞ்சூர்குடைந்தார்மலர்ப்பதங்கடொழுதுவினைமாற்றுகிற்பாம்.

# முகவுரை.

அருள்பொழிசவுனகாதியருந்தவர்க்குவந்தருசூதன்
தெருள்வழிந்தொழுகச்சொற்றதிருவளர்புராணமாகும்
பொருள்வழிகாந்தத்துள்ளும்பொருவில்பல்லாகமத்தும்
இருளழியடியார்கோட்டியிசைத்திடுபெறுவலுள்ளும். ௫

கருதரும்விரதராசங்கவுத்துபமாதியாக
விரிபலவிரதங்கூறுமேன்மைசானூல்களுள்ளுங்
குருகுலாமவுணற்செற்றகுமரவேள்கந்தசட்டித்
தெரிகதைநியதியாவுந்திரட்டிநன்பொருள்செறித்தே. ௬

வண்டினந்தேறலுண்டுமெருண்டிசைபாடுநீபங்
கொண்டலர்ந்தருணந்தோய்ந்துகுலவுமீராறுதோளான்
கெண்டையங்கண்ணாள்வள்ளிகேள்வனின்மான்மியஞ்சொல்
எண்டருங்கந்தசட்டிப்புராணமாவியம்பாநின்றேன். ௭

வேறு.

புரகதமிழைத்துப்புலியதள்கரியின்போர்வைமேற்கொண்டனனேழு
குரகதங்கொடிஞ்சியோருருட்டிகிரிக்கொற்றவன்குபேரனல்லங்கி
உரகர்தன்விழியாப்பணியநாவுடையவும்பர்கோனம்பரனருளும்
மரகதக்கிரணமயூரவேளடியர்வாழ்த்தொலிநூலெனமகிழ்வான். ௮

வேறு.

இத்தகையகந்தசட்டிப்புராணந்தன்னையெழுதுவோரொருவிருத்தமேனுஞ்
சொல்வோர்-பத்தியுடன்கந்தசட்டித்தினமேற்கற்போர்பாருலவுமறமாதிநான்
குஞ்சார்வர் -வித்தகப்புத்தகஞ்சேருமனைகடோறும்விளங்குதிருவருண்ணுகும்
வியன்புராணச் -சுத்தமுறைதானமருண்மேலையோர்மெய்ச்சுகம்பெறுவரெனச்
சூதன்சொற்றனன்றே. ௯

வேறு.

உடம்படன்முதலாவெழுமதந்தழுவியோங்குசொற்சுருங்கலாதியவாத்
திடம்பெறுமழகுமுத்திபெண்ணான்குந்தேர்தமிழ்ப்பாவலரெனரு
மடம்படுபுன்சொலனைகவிகந்தன்மாண்புசேர்சட்டிமான்மியத்தோ
டிடம்படவளைந்ததாதலிற்கொள்வர்தருமிச்சிலாமெனவே. ௰

வேறு.

புண்ணியகந்தசட்டிப்புராணமாயிரத்தொடெண்ணூ
றெண்ணியசகாத்தமேழிலிசைபினமத்தநாளில்
வண்ணநீளிலங்கைவட்டூர்வளர்தெக்கிணாலயத்துக்
கண்ணவிங்கேசர்முன்னர்க்கவின்றரங்கேறிற்றன்றே. ௧௧

## முதலாவது

# கந்தசட்டிச்சருக்கம்.

ஆதியாயணுவாயறிவாயொளிர் - சோதிதாள்பணிசூதமுனிவரன்
மாதவத்தர்மனமகிழ்வெய்தவே - நீதிசால்கந்தசட்டிநிகழ்த்துவான். ௧௨

வேறு.

திருவளர்முதற்சிருட்டிதிகழயன்கற்பமோனை
பொருள்வளர்சனகனாதிபூசுரர்மறையுந்தேட
அரியசின்மயமாஞ்செம்மலார்கயிலாசமெய்தி
மரகதமயிலோர்பாகன்மலரடிவழுத்தினாரே. ௧௩

ஞானயோகியர்க்குமெட்டாநாயகஞாலமண்டம்
வானகஞ்சொலிக்குஞ்சோதிமறையுணாபொருடெரித்து
மேனவையொழித்துவாய்மைவிளங்குமெய்ஞ்ஞானயோகம்
ஆனதித்தகைமையென்றேயருள்கெனப்பரவினாரே. ௧௪

தீவிரதரஞ்சிறந்தசிந்தையிற்பத்திசாலும்
நாவலருணைக்கிரங்கிநாகமுநதியுஞ்சூடுந்
தேவர்கோன்சைவபாததெரிசனந்தெரித்துமோனம்
ஓவிலாஞானயோகவுயர்நிலையுணற்றிக்காட்டி. ௧௫

நின்றிடவயன்மாலும்பர்முனிவர்தஞ்செயலினீர்மை
பின்றினரொடுக்கமுற்றார்பேருலகுயிர்கள்யாவும்
ஒன்றினசெயல்களற்றவுமைசிமயத்தினோற்றாள்
என்றிடிற்சிவமேயார்க்குமிறையெனற்கையமுண்டோ. ௧௬

அத்தகைஞானயோகமரனுளங்கிளர்ந்துமல்கிச்
சுத்தனைமறைகட்கெல்லாஞ்சொலற்கருந்துரியாதீத
சித்தனைச்சதாசிவத்தைச்சிவமயந்தனிலெழுப்ப
நித்தனுங்கலைசுருக்கிநிருமலமனத்துதித்தான். ௧௭

நிருமலசுயம்புவானநிலவொளிபரப்பியன்பர்
கருமலங்கழற்றிவீடுகொதலித்தவர்கட்கீய
மருமலர்நீபமாலைவயங்கச்சண்முகங்கொண்டுற்ற
பொருமலங்ககற்றியாளப்புரரதனனுதயஞ்செய்தான். ௧௮

சுத்தசத்தாகியோங்குஞ்சுப்பிரமணியமூர்த்தி
அத்தலையுதயஞ்செய்யவரிமுதலுலகமெல்லாஞ்
சத்திமாத்திரையிலான்றதவத்தர்கள்ஞானயோக
சித்தசங்கற்பமுற்றார்செகமுயிர்தேங்கிற்றன்றே. ௧௯

தன்னிகரபின்னாசத்திசாலுமிவ்வொளியேயென்றும்
உன்னருஞ்சதாசிவந்தானுணர்வினிற்றோன்றிற்றென்றும்

இந்நிலைதகமேயென்றுமிதனருளுலகமென்றும்
அந்நெறிசிவமுறைப்பச்சதாசிவமதிலமர்ந்தான். ௨0

ஆரணப்பொருளாமையனாறுமாமுகத்துவள்ளல்
பூரணக்கருணையான்முன்புந்திசெய்சிவமுவப்ப
ஏரணக்கந்தசட்டியெனுந்திதியாறுமின்ன
காரணத்துதித்ததென்றுக்கவினுறப்புகன்றிட்டானே. ௨௧

வேறு.

வானுறையமரரிந்திரனயன்மால்வாழவெற்பகந்தடிநெடுவேல்
ஞானநாயகவேளாறுமுகத்தண்ணனலந்திகழ்சட்டிமான்மியமும்
எனவுந்தெரித்தாய்பூவுலகினருமிருமையும்பெற்றினிதுய்ய
மேனவில்விரதவிரிவெலாமுரைத்திநூரவென்றனர்விறன்முனிவர். ௨௨

கந்தசட்டிச்சருக்கம் முற்றிற்று.

## இரண்டாவது

# சூராதிகள்நோன்புரைத்தசருக்கம்.

அணிதிகழ்சூதமேலோனருந்தவர்வதனநோக்கிக்
கணிதிகழ்சுருதியேத்துங்கந்தசட்டியினன்னோன்பு
நணுமினனவைதொலைத்துநலஞ்சுபமின்பநல்குந்
துணிவுளபுனிதகாதைசொல்வனென்றுரைசெய்தானால். ௨௩

முந்துசீரறிவின்மேலோர்மொழியுமெய்ச்சாகதீப
மந்துபபாகரன்சீர்மனைசுகுமாரிபாலின்
வந்திருபுதல்வரோர்போதுதித்தனர்வயங்கப்பின்னர்ச்
சந்தமார்கனிட்டராய்வேறிருவர்தாரணியிலுற்றார். ௨௪

மாதவத்தந்தைமுன்னர்வருமிருபுதல்வருக்கும்
ஓதிபகனிட்டருக்குமுயர்சூரன்பதுமன்சிங்கன்
காதுதாரகனெனும்பேர்கலைநெறிவழியிற்சாற்றி
மேதகுசடங்கமாற்றிவிதிமுறையரசுசெய்தான். ௨௫

மலிதிறல்பெருகுஞ்சூரன்வயங்குவேற்பதுமனோடுங்
கலிகெழுவேட்டைபுக்குக்கதிருகளினியாற்றில்
ஒலிதிரைக்கரையின்கண்ணேயுயர்மாந்தர்புரியுநோன்பு
பலிதவவிரதங்கண்டுபண்புடனிருந்தானன்றே. ௨௬

சிங்கன்வாளரியின்வேட்டைசெய்தனன்றாரகன்போர்
தங்கினன்கரியினத்தின்குருகினிற்சட்டுநாளாய்

இங்கிவர்கருதார்நோற்றுங்கியல்கந்தசட்டிநோன்பின்
மங்கலதினமுங்காணவாய்ந்ததுபெரிதுமாதோ. உ௭

சிந்தனைக்கரியஞானசிவம்பொலிசூரனாதி
வெந்திறனிருபர்வேட்டமீண்டுதந்நகரம்புக்கு
மந்திரவேதிகண்டவழியயம்பொன்னுகின்ற
இந்திரவிலாசமென்னவிதயசாந்திகமெய்துற்றார். உ௮

தவம்புரிவினைவுகூரத்தன்மகார்க்கரசவாழ்வு
சிவந்தெழமகிபரித்துத்தாதையுந்தவத்தினேர்ந்தான்
சிவம்புரிபுதல்வர்பூமிதிருந்தரசியற்றுநாளிற்
பவம்பரிகும்பயோனிபார்த்திவரவையின்வந்தான். உ௯

வியந்தடிபணிந்துபோற்றும்வேந்தருக்காசிநல்கி
நயந்துபின்னகத்தியன்சீர்நராதிபரிதயமேற
வயந்திகழ்வடிவேலண்ணன்மாண்புகொள்விரதநோன்மை
தயங்கநன்றுரைத்தானன்னோர்தனயர்பாற்புவியிருத்தி. ௩௰

முனிவருக்கரசன்சொற்றமொழியெலாந்தலைமேற்கொண்டு
கனையொலியுவரிவேலைகடந்துகாவலந்தீவெய்திப்
புனிதசிந்தையினராகிப்பொற்பமர்காஞ்சிநேடி
வினைவலையொருக்குமாறுவிரும்பியங்கணைச்சார்ந்தார். ௩௧

வேறு.

முற்றேவரும்பரில்யாகன்முறையாற்றிமுக்குறும்பைச்
செற்றேவருமூவர்க்குமோர்தேவாச்செகமளிக்குங்
கற்றேவரும்வில்லாக்கியகடவுட்டிருமகவைச்
சொற்றேவரும்வியக்கத்தவந்தொடுத்தார்வினைதடுத்தார். ௩௨

வேறு.

இந்தநீர்மையினிங்கிவரெய்தலுந் - தந்தியானனடவுசதமகன்
முந்துதேவர்முனிவரர்விஞ்சையர் - தந்தமன்பொடுதாழ்ந்தயல்சூழவே. ௩௩

மிக்கவேதனும்விண்டுவுமுன்செலத் - தக்கமங்கலகின்னரர்தாமிரு
பக்கமாகிப்பலாண்டிசைபாடவே - செக்கர்மேனிச்சிவபரன்வைகிய. ௩௪

கயிலையங்கிரிசென்றுகடைமுறை - இயலுநந்தியிருங்கழலைப்பணிந்
தயில்செய்சூலத்தரன்பெருங்கோயிலின் - நியதிசாலவுநேர்ந்திருந்தானரோ. ௩௫

வேறு.

மூவாதமறைப்பொருடேரனந்தகோடிமுனிவரிமையவரயன்மான்முதலோர்யா
பூவாதமலரிதயங்கசிந்தேயன்பிற்புராதனசெஞ்சடைநாதபுனிததினைந் [ரும்
தாவாதகொன்றையிளமதியங்கங்கைதரித்தபுராந்தகமூவர்தம்மின்மிக்க
தேவாதிதேவவெனக்கனகமன்றிற்றிகழரியாசனத்தொளிருஞ்சிவபிரானை. ௩௬

பவளமலைப்படர்ந்தபசுங்கொடியினொன்றிப் பலபுவனசராசரமும்படைத்
துப்பேணி - எவளவெனுமொருமலமுந்தலையுறாமலீசனருளறிவிச்சையியற்ற
லாற்றித் - துவளனகசுந்தரியாரணியைத்தொண்டர்துயரனைத்துந்தொலைத்தரு
ளுங்கிரியாமூர்த்தக் - கவளமதவாரணத்தைமுறையினேத்திக்கடவுணந்தி
விடைகொடன்னோர்கருணைபெற்றார். ௩௭

## வேறு.

வேதாகமரசதாசலமொருவிப்பினர்விரைசார்
தாதார்தருகந்தாசலமெய்தித்தனிபணியா
மீதார்வலின்மயில்பாதமுமெய்யன்பொடுதொழுதே
ஓதாய்வரவெனலுஞ்சொலியொகரங்கொடுவிடவே. ௩௮

முந்தாகமசுருதிப்பொருண்முதல்சன்னிதிசென்றே
சிந்தாலயமிசைவந்தனைசெய்தார்குருநாதா
நந்தாமணியொளியேயெனநாவிற்றுதிபரவிச்
சந்தார்புரமங்கம்புவிதாழத்தொழுதனரால். ௩௯

தங்கட்கிசைவரமெய்தினர்சலசம்பொருவிழியோன்
திங்கட்பிறைநிகர்வானுதல்பொலியுந்தெரிவைக்காய்
அங்கட்சதுமுகனாயினனயிராவதமென்னும்
வெங்கட்பொருகளிற்றோன்முதல்விண்ணோர்பலரெவரும். ௪0

## வேறு.

இந்தவாறெய்தித்தேவரெழின்மயின்மருங்குவந்து
சுந்தரமயிலேயெங்கள்சுப்பிரமணியற்கான
சந்தகல்யாணமேநின்றலைமையுஞ்சிறிதுநாளில்
அந்தமாய்ப்போகுங்கொல்லோவென்னயாமயிர்க்கின்றேமால். ௪௧

ஆவகைநிகழ்தற்கேதுவனைத்தையுமினிதுகேட்டி
பாவமில்சாகதீபபார்த்திவர்சூரன்மேன்மை
மேவியபதுமன்சிங்கன்மிக்கதாரகனாநால்வர்
தாவடிவேலினாற்குயானமாச்சமைதல்வேண்டி. ௪௨

பணிலமுமுத்துஞ்சிந்திப்படுகரைபுரண்டுலாவுந்
திணிதிரைக்கம்பையாறுசேர்கச்சிநகரினோங்கும்
அணிதிகழ்மாவினீழலற்புதவிரதநோற்றுத்
தணிவருந்தவமேபூண்டுசரித்தனரின்னுங்கேண்மோ. ௪௩

சிகிபெருஞ்சேவல்சிங்கஞ்சிந்துரவடிவமாகிப்
பகிரதிபாயுஞ்சென்னிப்பண்ணவன்குமரனண்டம்
அகிலமும்படைத்துங்காத்துமழித்தும்பின்மறைத்துமன்பால்
நிகிலமுமருள்செவ்வேளைநீங்கலாதடைவரன்றே. ௪௪

இப்படியன்னோர்சாரவின்னமுஞ்சிலநாளுண்டால்
அப்படியவர்கள்சேரினாரதுதவிர்க்கவல்லார்
துப்படியவர்கட்கிதல்சுப்பிரமணியர்செய்கை
எப்படியெனினுநீமற்றிவ்வரசிருத்தல்வேண்டும். ௩௫

எனப்புகன்றிமையோரேகவொகரந்தன்மனத்தினெண்ணி
வினைப்படுகைபொருகில்யாவர்வெல்லுவரென்றுதேர்ந்து
மனப்படுபுந்தியொன்றுமருவவப்பொழுதேபாங்கர்
நினைப்புறுபூதநாதர்தங்களைநிலத்தினுய்த்தே. ௩௬

மாறிலாவிமானமீதின்மன்னவர்நான்குபேரைப்
பேறுறவேற்றிக்கந்தன்பெட்புறுமுலகினுய்ப்பத்
தேறியசூரனாதித்தெரிதருமரசர்மாழ்கி
வேறொருசெயலுமின்றிவெய்துயிர்த்தாங்கணுற்றார். ௩௭

அரும்பொருள்பெறுதற்காகவாங்கனம்வருந்திநோற்றோம்
விரும்பியபெற்றிலோமேல்விதிவழியாவர்தீர்வார்
இரும்புளேயுண்டநீரினிறுக்குஞ்சாலோகமென்னாச்
சுரும்பிமிர்தொடையார்பின்னர்த்தம்முளேதுயரமுற்றார். ௩௮

சராசரமனைத்துமானதற்பரனியற்றுந்தன்மை
நிராசரமாகுமோசீர்கேடகந்தவரேவேலார்
கராசரவணத்தோர்காலங்கான்முளையாகிமிக்க
பராசரமுனிவன்பாலர்பாவத்தைத்தொலைக்குமேலோய்.

என்னவேகூறுமாற்றமிதமிகுபூதசேனை
மன்னண்டாபரணன்காதின்மருவுறவவனுணர்ந்து
பொன்னண்டர்பதியும்வேதன்புண்டரீகத்துக்கண்ணன்
முன்னவன்மயிலுக்கோதமுடிந்ததிவ்வாற்றினென்றான். ௪0

ஆவிதுவருமோவெங்களருந்தவங்குறைந்துபோமோ
தேவர்கடமக்குநாமோதீர்க்கருங்கொடுமைசெய்தோந்
தூவிமாமயிலெமக்குத்துர்ச்செயல்புரிந்ததல்ல
ஓவருந்தேவர்செய்தாரொருபெருமிடும்பையென்னா. ௪௧

தீங்குசெய்தேவருக்குத்தீங்குசெய்தவர்செருக்கை
வாங்குறவ்வலியெமக்குவாய்ந்திலவந்தோவந்தோ
தேங்கமழ்நீபமாலைதிகழ்புயனேவலாற்றி
ஈங்கிவணிருத்துங்காலமிசைந்திடுமளவுமென்னா. ௪௨

பூதர்களோடுமொன்றிப்பொருந்தினர்கந்தவேளின்
தாதலர்கமலமன்னதாளிணைகண்டுபோற்றிச்
சாதல்பின்பிறத்தல்நீங்குந்தபோதனர்குழாமுநீடி
ஆதரம்பெருகவாழ்ந்தாரணிசெய்நால்வருமற்றம்மா. ௪௩

மரகதங்குயின்றலன்னவடிவமரேழுநாமக்
குரகதம்பூண்டதேரோன்கொம்மெனவடபானீங்கிப்
புரகதமிழைத்தோன்வில்லின்புறத்துத்தென்பாலதாகிச்
சரகதராசிநீந்தித்தகுதுலைமீதுவந்தான். ௫௪

குயிலெலாங்கொக்கினேறிக்குரம்பைபுக்கொளிப்பக்கார்போன்
மயிலெலாஞ்சிகரியேறிமணிச்சிறையுளர்த்தேயாடப்
பயிலெலாமறையுந்தேர்ந்தபாவலர்கவிதையென்னப்
புயலெலாவோசையோடும்பொழிந்ததுவருடமாரி.

அத்தகுகாலந்தன்னிலம்புலியிரவிநண்ணி
ஒத்தெழுங்கந்தசட்டியுயர்தினம்புகுந்தவேலை
வித்தகவிண்ணோர்மாலும்விரிஞ்சனும்விண்டுதானுஞ்
சத்தெனுங்கந்தவேளின்சயிலமதடைந்தாரன்றே. ௫௬

அடைந்தனர்சிகாவளம்பாலவரவரூர்திவைத்து
விடந்திகழ்களத்தனீந்தவிமலனைவிபுதவிண்ணோர்
மடந்தெறவுதித்தகோலவள்ளலைவணங்கிப்போற்றித்
தொடர்ந்தொளிர்ஞானவாரிதோய்ந்தனர்குதூகலித்தார். ௫௭

பன்னருங்குமரஞானம்படிந்தவராங்குவைக
முன்னரேயமரர்சூழ்ந்தவினையினைமுடிக்கவெண்ணி
மன்னவர்சூரன்பன்மனுதியர்மயூரஞ்சார்ந்து
நன்னரேவணங்கிநின்றுநயமொழிபுகலுவாரால். ௫௮

ஈறிலாமயிலேதேவர்யாவர்க்குமெவரெவர்க்கும்
பேறினையளிக்கவேண்டிப்பிறந்துளகுமரமூர்த்தி
தேறொருயானமேநின்சிறப்பினைமகிமைதன்னை
வேறினிப்பெறுவார்யாவர்மெய்ம்மைநான்மறையுமோதும். ௫௯

தேங்கமழ்துளபமாலைச்சீதரன்வாணிகேள்வன்
ஓங்கலின்சிறையரிந்தவச்சிரனும்பர்யாரும்
ஈங்குநின்முன்னர்த்தாழ்வரென்பதுதாமுணர்ந்தும்
பாங்குறுகருடனன்னம்பாணிறவேழமூன்றும். ௬0

தன்னையேவியந்துமெச்சித்தருக்கிநிற்சிறக்கணித்துப்
பின்னரிங்கினியர்போலப்பிறங்கினவெனலுமஞ்ஞை
கொன்னெறட்சிம்புள்போலக்கொக்கரித்துகண்டுசீறி
அந்நெறிகசேசன்றன்னைச்சிறகரினகைந்துமேலும். ௬௧

துரந்துசென்றுடன்றுசிந்தித்துண்டமேலெடுத்தயின்று
கரந்தயரெகினமஞ்சக்கவ்விவாயிட்டுநங்கிப்
புரந்தரனூர்தியாவிபோன்றுவித்துடனருந்தி
வரந்தருமயூரமுன்போல்வதிந்ததுவாயின்மன்னே. ௬௨

அடியவருளத்துவைகுமற்புதானந்தஞான
வடிவினைப்பிரணவத்தின்பொருடரும்வரதவாழ்வைக்
கடிகமழ்நீபமாலைக்கந்தனைக்கண்டுபோற்றி
முடிவிலாமகிழ்ச்சியுற்றேமுருகனல்விடையும்பெற்றார். ௬௩

ஆங்கரியயனிலேகரண்ணல்சன்னிதிதணந்து
பாங்கரின்மயில்பாற்றத்தம்பலம்பயிலூர்திகாணார்
தேங்கமழ்தொடையற்செவ்வேள்சன்னிதிதிருமிப்போற்றித்
தீங்கருங்கவலைநீடித்தம்மனக்குறைநுவன்றார். ௬௪

நெட்டிலையயில்வேலண்ணனிகழ்ந்தனயாவுமோர்ந்து
கட்டழல்சொலித்துநின்றகாமருமயிலைநோக்கிப்
பட்டிடுமுவணமன்னம்பானிறத்தந்திதம்மை
இட்டிடுவிரைவினுங்குமியற்கையினென்னலோடும். ௬௫

தலைவனங்குரைத்தமாற்றந்தலைமிசைபணிவிற்கொண்டு
நிலைகெழுமொகரமந்தநியதியினுமிழ்ந்தகாலைக்
கலைகளுந்தெரிதற்கெட்டாக்கந்தவேளவற்றின்சோக
மலைதவிர்ந்திடப்புரிந்துவளங்கினனுவகைமாதோ. ௬௬

தன்னிருங்கருணைகூர்ந்துதற்பரனவற்றைநோக்கி
முன்னருங்காட்சிநல்கிமுதல்வரோடொன்றிவாழ்திர்
என்னநல்வரமுமீந்தானெறும்மயிலினைவிழித்தே
என்னதானினைந்துநோறாவிச்செயல்புரிந்தாய்நீயே. ௬௭

மெலியரைவலியர்சீறின்விரைவினங்கவரைவாட்டும்
நிலைவளரறமதென்றேநிகழ்த்திடுநீதிநூல்கள்
கலிகெழுகலுழனன்னங்கரியைநீயொறுத்தலாலே
சிலையெனப்புடவிவைகித்தீவினைதொலைத்தியென்றான். ௬௮

எரியெனத்தழற்றும்வேலையிருசெவிபுகுத்தாலன்ன
பரிபவமொழியைக்கேட்டுப்பரிந்துவெய்துயிர்த்துறைந்து
தெரியரும்பரமானந்தவாரியேசிறியேன்செய்த
கருதரும்பிழைபொறுத்துக்கருணைசெய்தருள்கவையா. ௬௯

மாறிலாச்சூரனாதிமறவர்புன்மொழியைத்தேறி
வீறுகொளுவணமன்னமிக்கசிந்துரத்தையட்டேன்
கூறருமுதலேயிந்தக்குற்றமார்பொருப்பின்கோலம்
மாறியெஞ்ஞான்றுமேலாமலர்ப்பதம்பெறுவன்மாதோ. ௭௰

இனிதருள்புரிகவென்னவிறையருள்செய்துநோக்கிப்
பணிதருவரையதாகிப்பரித்தெமைச்சிலநாள்வைகி
வினையில்சாரூபம்பெற்றுமேவுதிநம்பாலென்று
அனகனுமுரைத்தானவ்வாறானதுமயூரமம்மா. ௭௧

பொன்மலைகலங்கச்செண்டாற்புடைத்தபாண்டியனிலத்திற்
கன்மலையாகிவைகிக்கந்தவேளினையுந்தாங்கிச்
சொன்மலைவில்லாஞானமேனியுந்துலங்கப்பெற்று
மின்மலைபாகன்மைந்தனீடருளமர்ந்ததன்றே. ௭௨

புள்ளருங்கருதாவஞ்சம்புரிந்துகோளிழைத்ததீய
மள்ளரைக்குமரமூர்த்திவருந்திரென்றழைத்துநீவிர்
எள்ளருங்கருடனன்னமிபத்தினைமயில்சினக்கத்
தள்ளரும்பகைமுடித்ததகைமையென்னுரைத்திரென்றான். ௭௩

உயிர்த்தொகைமகிழுஞ்சட்டிவிரதநோன்புறுதியெண்ணிச்
செயிர்ப்பறுத்தொளிருங்காஞ்சித்திருநகர்சென்றுநின்னைப்
பெயர்த்தொருகாலுநீங்காவழியமேமுதலபெற்றி
உயர்த்துநாற்சின்னமாகவுயர்தவமிழைத்துநின்றேம். ௭௪

வானவரழுக்காறெய்திமயக்கலுமயூரமெம்மை
யானமீதழைத்துச்சாலோகந்தருமியற்கைகண்டேம்
ஆனதாலினையதீமையாற்றினமெனலுமன்னே
காளிமிர்நீபமாலைக்கடவுளுமியம்பலுற்றான். ௭௫

வேறு.

இன்னாதனபுரிவார்தமையின்னாதனபுரிதல்
என்னாளினுமிழிவேயுலகிதநீங்கினிர்புவிமேற்
றொன்னார்தருமசரக்குலங்குறுகித்தவமுயன்று
பொன்னாடாவருத்திப்புவியுறைவீரெனப்புகன்றான். ௭௬

அறியாமையினெளியோர்புரிதருதீமையையகமே
குறியாவினைவழியாய்விதிபுகல்வாய்குகவிரதம்
பெறுபேறிதுவெனலோடருள்பெருமான்முருகேசன்
தெறுமாயவளிடைகாசிபரிஷிசேர்தருநிசியின். ௭௭

சூரன்பதுமனுமோருடலுறழ்வீர்துறுசிங்கன்
வீரம்பொலிதருதாரகனிவிர்சிங்கமுகங்கள்
சேருங்கரிமுகமெய்துவிர்செயுதும்வினையனந்த
கோரம்புரிதளமாகவெகுளுகிப்புவிசனிப்பீர். ௭௮

புவனங்கெழுவிரண்டமுமதிபுங்கவர்பெருமான்
சிவனங்கருள்வரமெய்துவிர்தேவாதியர்கலியக்
கவர்துன்றியமனராயுயிர்கவலுந்துயரயர
நவமீதுறழ்பன்னீர்யுகநலனீடுறவாழ்வீர். ௭௯

அக்காலையினும்மோர்செயலாற்றாரரிபிரமர்
மைக்காலமெய்முகில்வாகனமனனாதியவானோர்
தொக்காலநல்யோகன்கிரிஞன்றித்தொழுதடிகேள்
எக்காலகந்துயர்தீர்தருமெனலுஞ்சிவனருளால். ௮௦

வருந்தீரெனமொழியாவெனைமகவாமணிலுதவத்
திருந்தாரணநவில்சண்முகதிருமேனியொடுதியாக்
கருந்தாதினைநிகர்நும்மனமலினங்களைநீத்தருள்வேன்
பெருந்தாரகவியமப்பொருள்பொறுவீர்தவநெறியே. ௮௧

வேறு.

எகுமென்றருளலோடுமிறைசெயன்முன்னர்த்தேறிப்
போகபூமியினொன்றாயபுவிதனிலொல்லைமேவித்
தேகமுன்னுரைபோலெய்திச்செனித்தனர்மிகச்சிறந்து
மோகமாவுலகநீடிமுதிர்ந்தனரென்பமாதோ. ௮௨

மதிமொழிமாயையீந்தவான்பொருட்குவைகளீட்டிப்
புதுமதில்விசாலமாக்கிப்பொற்புறுகுண்டம்வேதி
கதுமெனவியற்றிவேள்விக்காவலர்க்கிசைந்தவேதம்
மதுகையம்பலியுநல்கிமன்னுபூசனையுஞ்செய்தார். ௮௩

அவுணராநான்குதிக்குமணிபெறநிறுவிச்சூரன்
மவுனநேராயிரத்தெண்மண்டலம்வேதிகும்பந்
தவநலப்பூசையாற்றித்தழல்வளர்த்தவியுநல்கிக்
கவினெழுந்தாரகன்றன்காவலிலவற்றையிட்டான். ௮௪

நூற்றெட்டெண்வேதிகுண்டநுணங்குமண்டலத்தின்வேண்டு
மாறுயர்பூசையாற்றியதற்பினரரிமுகத்துப்
பாறுசூழ்படையினானிற்பாதுகாத்திடப்பணித்துத்
தேற்றருமுதற்குண்டத்துச்செய்வினையாவுஞ்செய்தான். ௮௫

கண்ணுதற்பரனாய்மேலோர்கருத்தினினடிக்குமெங்கள்
புண்ணியப்பொருட்கேயாகபூசனையாதிசெய்து
துண்ணெனப்பலியுநல்கித்துலங்கழல்குண்டமேற்றி
விண்ணவர்க்கரியயாகம்விதிமுறையியற்றினானே. ௮௬

அப்படியியலும்வேள்வியனலெழுந்தண்டமுட்டி
மைப்படிபடிவச்செங்கண்மாயவனகரஞ்செல்லத்
துப்படிவேழமூர்தியிம்மகந்தொலைத்தற்கான
கைப்படிவிஞ்சைசெய்தும்பயன்பெறான்கலங்கிமீண்டான். ௮௭

மாறிலாவேள்வியிந்தவண்ணம்பலயுகங்கள்செல்லப்
பேறினைக்கருதிச்செய்தும்பிறைமுடிப்பரமனங்கண்
எறிவர்ந்தருளாச்செய்கையுளநினைந்தின்னல்கூர
ஊறுசெய்திடுவான்வாளோடும்பரிலுகைத்துநின்றான். ௮௮

குருதியேநெய்யதாகத்தலைவுடற்றசைகளெல்லாஞ்
சுருதியினவிகளாகச்சுயம்பரம்பொருளேயென்முன்
வருதியென்றிசைத்துப்போற்றிமறைகளுங்காணவள்ளற்
கருதியந்தரமேநின்றுகாமருவேள்விசெய்தான். ௮௯

பல்லுகமினையவாறுபயன்பெறமகமேயாற்றிக்
கல்லுகச்சென்றெறிந்தகடவுணற்றாதைமீதின்
வல்லுகப்பிடிபோற்சிந்தைமருவவக்கினியின்குண்டத்
தில்லுகமானதம்பத்திடைகுதித்துருவிப்புக்கான். ௯௦

மடித்திடுமெயிற்றுச்சூரன்வயங்கனற்குண்டமூழ்கித்
தடித்திடுமுடம்புவெந்துசாம்பராயங்கண்மாள
வடித்தவேற்றுணைவரேனோர்மற்றதுகண்டுசோர்ந்து
துடித்தனர்பதைபதைத்துத்துளங்கிநைந்திரங்கினாரே. ௯௧

திரிபுரநகையாற்சிந்துஞ்சம்மலைக்காணவேள்வி
பெரிதுமிங்கியற்றிநம்முன்பிறங்கெரிவீழ்ந்துமாண்டான்
விரதமேன்றவமேன்யாமும்விளிவதேகருமமென்று
அரிமுகன்றாரகன்விண்ணந்தரத்தெழுதலுற்றார். ௯௨

மாக்கவினிலங்குதேகம்வாளினாலரிந்துவீட்டித்
தேக்குறுசோரிசிந்தித்தீயிடைப்புகுதுமெல்லைத்
தாக்குரலடியிற்றந்திசியசம்முகத்துவீரர்
போக்குமாறுயிரெனென்னாப்புண்ணியன்விசும்பின்வந்தான். ௯௩

சரிந்தொளிருடையுந்தண்டுந்தயங்குமுந்நூலும்யாரும்
விரைந்தடிபணிவிருத்தவேதியவடிவுமாகிப்
பரிந்திடுசிங்கதந்திமுகர்தமைப்பார்த்துநீவிர்
வருந்துவதொழிந்துநன்குவருமினும்வரலாறென்றான். ௯௪

அன்பொலியுரையைக்கேட்டவரிமுகனையன்றாளிற்
பொன்பொலிமுடிபுனைந்துவணங்கியேபுகலலுற்றான்
மின்பொலிமுந்நூன்மார்பமிகுதவக்காசிபற்குக்
கொன்பொலிமாயைதன்பாற்குவலயமுதித்தோமூவர். ௯௫

சூரனேசிங்கன்றாயதாரகனெனப்பேர்சூடும்
வீரர்யாமன்னையேவன்மேற்கொளீஇச்சிவனைவேண்டி
ஆரழல்வேள்வியாற்றியுகம்பலவாயுங்கங்கை
நீறணிசெய்யவேணித்திருமலற்கண்டிலேமால். ௯௬

கடவுள்வந்தருளாநீர்மைகண்டெமுனைகுஞ்சூரன்
திடமிகுகுண்டமோங்குஞ்செந்தழல்வீழ்ந்துமாய்ந்தான்
அடியமிங்கிருந்துமென்னபயனெனவாவிவீட்டக்
கடிதின்யாமுயலும்வேலைகளைகணைத்தகைவுசெய்தாய். ௯௭

என்னலும்விண்டுதண்டாயேந்துவேதியனுமோர்ந்து
முன்னவன்சூரனேபோன்முளரிவீழ்ந்தழியமுன்னீர்
அன்னவற்றருவலென்னாவம்பொனாட்டுறையுங்கங்கை
தன்னையேவிளிக்கக்கோடிமுநங்கொடச்சாலைசென்றே. ௯௮

வரநதிநாப்பணுற்றவயங்கனற்குண்டம்புக்குப்
பெருநதியாதலோடும்பிறங்குமக்குண்டநின்று
திரையிடையாலகாலந்திகழ்ந்தெனச்சூரபன்மன்
உருகெழுகோலத்தோடுமொய்யெனவெழுந்தானன்றே. ௯௯

ஆயிடைவரஞ்செய்மேலோனந்தணனுருவமாற்றிச்
சேயபொற்சடையின்வாலதிங்களுநதியுமின்னிப்
பாயவெள்விடையின்மீதுபார்வதியிடப்பாலாக
நாயகக்காட்சிதந்தானற்றவம்பொய்க்குங்கொல்லோ. ௧௦௦

கண்டனன்மறைகளெல்லாங்காணரும்பொருளைக்காள
கண்டனைச்சூரபன்மன்கைதொழுதேத்திப்போற்றித்
தொண்டருக்கெளியபெம்மான்சூரனேநெடிதுகாலம்
எண்டருந்தவஞ்செய்துற்றாயெரியிடைவீழ்ந்துமாண்டாய். ௧௦௧

வேட்டனகேட்டியென்னவிமலமெய்ப்பொருளேவேதன்
நாட்டமாயிரத்தன்விண்டுதேவர்நம்மேவலாற்ற
ஈட்டுமிப்புவனமண்டமெங்குநம்மரசுசெல்லக்
கோட்டமுமழிவுமில்லாக்குறைவறுவயிரமேனி. ௧௦௨

இரதமேயாதிநான்கினெண்ணில்பல்கோடிசேனை
சரதமந்திரமாசித்திதவப்பெருஞ்சேனைவீரம்
பொருதெமைச்செகாதசக்திபுவிபொலிசீர்த்திபுந்தி
கருதுமிவ்வரங்களின்னேகடவுணீயருள்கவென்றான். ௧௦௩

வள்ளலுஞ்சூரன்கேட்டவரமெலாமுவந்துநல்க
விள்ளுரையனுசரையன்விரைமலரடியிற்றாழத்
தள்ளரும்வீரர்காணுந்தமயனுக்கிருதோளாகி
எள்ளருமாயிரத்தெட்டெனப்புகலண்டமெல்லாம். ௧௦௪

நூற்றெட்டுகெம்புரந்துநம்மரசமரர்க்கேற்றிப்
பேறரும்போகந்துய்த்துப்பெருந்திருமல்கவாழ்திர்
ஈறினிமதுசத்தியன்றிமற்றெவர்செகுப்பார்
தேறுதிர்வரமென்றையன்சின்மயவடிவிற்சென்றான். ௧௦௫

**வேறு.**

அந்தப்போதேயாசுரர்வந்தாங்கருகெய்தப் - புந்திக்கோர்தாரகமென்றோ
தும்புகர்பாலின் - மைந்திற்சாரரிமந்திரசத்தார்மன்னுபதேசம் - பந்தித்தெய்
டின் - ஓதுசைவத்துறைபடிந்துநியமமாதியொழுகிவளர்குருவிடத்தினுண்மை
யான-மேதகையகிரியைசரியாதிகற்றவிதிவிலக்குப்பிராயச்சித்தங்கண்முற்றி-
நாதனருள்விதிப்படியேவிரதநோற்பினன்றெனநூன்மிகுதிபலநவிலுமாதோ.

**வேறு.** வேதமனுக்கற்றறியார்சற்குணங்கண்மேவாதார்கீழோர்தம்மிற் - போ
தமனுநூலுணர்ந்தோர்குணர்புவியுழவுசெய்வோர்புன்குரோதர் - தீதுநிறைவி
பிசாரர்மகனிடத்திற்றெய்வமறைதெளியக்கற்றோர் - பாதகடம்பயிற்றிடுவோ
ர்கைப்புமுதற்பதார்த்தங்கள்பகர்வோர்தாமும். ௫௭௮

**வேறு.** ஆசாரமில்லாதோர்கன்மரோகரங்கனைத்தர்விசேடாங்கர்மோசர் -தே
சாரும்பறவைவிலங்காடலாதிசெப்பமுறப்பழக்கசடர்திருநாணீங்கி - மாசார்ந்
தவனிதையணாமணந்தோர்சுத்தமன்னவுபாசனமிலர்மாபாதகத்தர் - காசார்ந்
துலைவதூடணங்கள்செய்வோர்களியர்குருபியர்பொய்யர்களியர்தூதர். ௫௮௦

சோம்பினர்மாதுருகுலத்தர்பெண்கடம்மாற்றோமுறுசிவனம்புரிவோர்சுத்
தமில்லார் - காம்பைரிகர்தோண்மகளிர்பூத்தபின்னர்க்கடிமணஞ்செயசடர்க
ளைகண்ணிலாதார் - தேம்புநெறிக்குண்டகர்கோளகர்கிராமத்திசையதிகாரியர்
மொட்டைச்சிரசர்நீதி - ஆம்பிறவிமரணருகுசியர்மென்கோளரண்ணன்மணமு
ற்றிடமுன்னறிவிலாதே. ௫௮௧

மணம்புரிந்தோருலகாசாரங்கள்சாருமனவிருப்பமற்றோர்மங்கலகரங்கள் -
நணுகுசுபமில்லார்கள்பாசாண்டத்தர்நாடுமருத்துவர்சிற்பர்நவைசெறிந்த - கணி
விடவிபதியினரன்னியபிறப்பிற்காரிகையைமணம்புணர்ந்தோர்கங்கைசூடிப் -
பணிபுனையுநம்பரன்மேற்பத்தியில்லார்பரவெருமைநாய்கழுதைபாக்கன்கோழி.

கொச்சைமுதனீசவிலங்கினைவளர்ப்போர்கோதில்பெரியோரிகழுங்குண
த்தின்மிக்கோர் - அச்சமறவேதநெறிமீறுங்கீழோரான்மவர்க்கமீதிரங்குமன்பி
லாதோர்-இச்சகத்திலிவர்மேன்மைசான்றோரேனுமினியரலர்விரதாசாரியருக்
கென்றே-கச்சரவம்புனைபரமனூல்கள்கூறுங்காசினியினித்திறங்கள்பூணுராகி.

வேதசிவாகமமுணர்ந்துஞானநூல்கள்விளம்புபொருண்முடிவோர்ந்துமெ
ய்மைபூண்டு - வாதுபுரிபரமதங்கள்கடியவல்லமாண்புடையனற்புதசின்மயவி
ஞான - சோதியிதயாம்புயத்திற்சொலிக்கக்காட்டுஞ்சுத்தன்மனமெய்மொழி
யிற்றகழிலாத - நாதனுயர்விரதநெறியனுக்கையீயுநாயகனென்றென்னூலுக
விலுமாதோ. ௫௮௪

தீதிலதோர்குருபத்திசிவசநேசந்தெரிசனஞானந்தேகபாரஞ்செப்பு - வா
தனைகள்சிவமயமதாக்குஞ்சுத்தமாண்புபுரிகுருவிரதவனுக்கையாதி - ஓதுபலக
டனூற்றவிவ்வாறின்றியுற்றவர்வெந்நிரயமுழந்துபின்னர்க் - கோதுபுரிமெ
ய்யூனரிழிகுலத்தர்குறைநோயராதியராக்குறுகுவாரே. ௫௮௫

நன்குபுரிகாலமொடுதேயமேற்றநவையின்றிப்புரிந்திடுதன்ஞானவல்லி -
மின்குலவுமிடப்பாலர்தந்தபாலர்விசாகரருட்பாலவர்பான்மேவவேண்டிற் - பு
ன்குரம்பையுடம்பாசைதேகவாஞ்சைபோக்குதலேவிரதமெனப்புகலுநூல்கண் -
மன்புகலும்விரததினமேலுமுன்பின்வருநாளுநியமமதுவழங்கக்கேணீ. ௫௮௬

திலநெயிடல்சவுரகன்மங்கோடன்மாதர்தெரிவையாமருவுதல்கூழ்மாண்
டங்காய்செந் - நலமிலவெண்கத்தரிக்காய்பீர்க்கங்காய்கொணுடுசுரைக்காய்
முருங்கைநாறுமுள்ளி - குலவுபெரும்பயறுழுந்துதகரைக்கீரைகுவிபருத்திவர
குதயபோசனஞ்சிர் - விலகிரவுபோசனம்வெண்கலத்திலன்னம்விரும்பியுண
லுச்சியனமேவவுண்டல். ௫௮௭

சாயங்காலத்திலனம்புராதனன்னந்தருகருணைக்கிழங்கெருமைத்தயிரோநெ
ய்யே - மேயபயமசமும்மையரிவைசேடமிக்கசிராத்தச்சேடஞ்சூத்ரர்சேடம் -
ஆயவனுசாரவன்னம்பிறர்கைத்துண்டியரியசிராத்தக்கிரியையழுகினுண்டி -
மாயநெறிக்கவரு[illegible]ல்பிரேத[illegible]னைசொல்வன்மமனப்பாதகரோடுறைதல்பேசல்.

தீதுசெயக்கண்டதனைவிலக்கிடாமைசிவனடியார்க்கிடும்பைசெயல்செய்யக்
காண்டல்- ஓதுதவக்குருநிந்தைகபிலையாதியுயிர்கடெருறவதனையொருக்காவன்

மை- பாதகங்கள்பலகேட்டல்செய்தல்காணல்பரதேசசஞ்சாரநடையேயின்ன- மேதகையவிரதபங்கமாகுமென்னவேதமுணரருந்தவர்முன்விதித்திட்டாரே.

விரிகிசணம்பயறுநறும்பசுவின்கிரமிக்கதிருப்பாத்திரத்தின்மேவுநன்னீர் - பெருகுமெழிற்கோதுமைநன்மலையிநெல்சிர்பிறங்குகரும்பிரசவெல்லம் பேரிநங்கே- உருகுநறுநெய்யாதிவிரதவுண்டிக்குவந்தனவென்றேசுருதியுரைக்குமிக்க- கருகுமலமார்காமப்பற்றழிக்குங்காதல்செறிமுனிவ இனுங்கழறக்கேண்மோ.

பங்கமுறின்விரததினமுன்னர்க்கொண்டபருவமதிற்கூட்டிமேற்படியியற்றல் - தங்குபிரமாலயத்திற்சென்றேபங்கஞ்சார்ந்ததொகைக்கேற்றபடிதாவிலாத- மங்கலமார்வேதியர்க்குவிரததேவர்மனமகிழ்பூசனையியற்றிவளஞ்சிறப்பப்-பொங்குபஞ்சமகாயாகம்புரிந்துபின்னர்ப்பூசனைபோசனமிடுதல்புரையிலாத.

புனிதரினாலிவ்விரதநியதியாற்றிப்பொருளீந்தப்பலனதனைப்பொருந்தவாங்கல் - நனிபெரியநானாதிகிரியையாற்றனலத்தவெனும்பன்னூல்சணவையில்காட்சித் - தனிமைசெறிபரம்பொருளாநமதுமேனிசார்ந்துபரமானந்தச்சலதிமூழ்கிப் - பனிசெய்பலபவம்போக்கிச்சுத்தமாகும்பதமுறைப்பனெனக்குமரன்பகர்வதானான். ௫௯௨

**வேறு.** உலகெலாம்படைத்துங்காத்துமொளிரிருமுதல்வரான - சலசமாமலரினோனுந்தாமரைக்கண்ணினோனும் - அலகிலிவ்விரதநோற்றேயசுரரைமுன்னர்வீட்டி - இலகினரவர்செயற்கையார்கொலோவறிந்திலாரால். ௫௯௩

முன்னொருபிரமகற்பமுடிவினிற்சகங்களெல்லாம் - வெந்துமேல்வியட்டிரூபமொடுங்கிமேற்சமட்டிதன்னிற் - றந்தவைலயித்தபின்னர்த்தற்பரனருளினாலே - பந்தமில்சுத்தசத்திபராபரையுதயஞ்செய்தாள். ௫௯௪

மணிவயிறுளைந்துக்கும்வால்வளைச்சங்கமேந்திக் - கணிதமின்மறைகடந்துகமலலோசனமொளிர்ந்து - துணிபடமதுவைச்சிந்துந்தொழிலெலாம்வல்லவிண்டங் - கணிகெழுமனாதிமுத்தவரனருட்பாகம்வந்தான். ௫௯௫

ஆங்கரியுந்திதன்னிலமர்தருகமலநாபி - தேங்குலகுருவமாக்குஞ்சிருட்டிகன்பிரமபோதன் - பூங்கமலாதனத்தன்பொருவினான்முகத்தினோடும் - வாங்கியதருப்பைமுந்நூல்வயங்கவந்துதயஞ்செய்தான். ௫௯௬

திருக்கிளருலகமெல்லாந்திசைகடன்மேருவாதிப் - பருப்பதமுயிரின்பொம்மல்படர்ந்தவனானைநிற்ப - மருக்கமழ்தொடையன்மாலைமலிசுவாய்ம்புமன்னன் - றிருக்கிலாச்சுவாரோசிடனுத்தமன்றாமதன்னே. ௫௯௭

ரைவதன்சாட்டுவாகனென்னமனுவறுவருற்றார் - தைவருரவிகுலத்திற்சார்ந்தவைவச்சதற்குப் - பைவளருலகையாளும்பாக்கியம்பலித்தமுற்சொல் - கைவருசுவாரோசிடமனுதிகழ்காலந்தன்னில். ௫௯௮

அறிதுயில்புரிந்தவிண்டிங்கரியநங்குலமுவப்பச் - சிறுவர்கள்பிறந்தாரில்லைச்செய்வதென்னினியானென்றுப் - பிறைதவழ்சடிலப்பெம்மான்பேரருளைடியன்ன - குறையினைத்தீர்க்குமாறுகுறித்திருந்தவம்புரிந்தான். ௫௯௯

**வேறு.** ஆதபம்பனிமழையனிலமாற்றியே - மாதபப்பெருந்துறைமருவிவிண்டுசெய்- நாதபதபசினினகுந்தகாந்திமால் - பாதபக்கயிலைமால்வரைபடர்ந்ததே.

அனகனைம்முகனயனரியுநாடரும்- பனகபூஷணன்மதிப்பாதிசூடிய - கனகமென்வேணியன்மீதுங்காய்தபத்- தினகரக்காந்திமால்செறியினெங்ஙனே.

கண்ணுதலெம்பிரான்களத்தொதுங்கிய - வண்ணமின்றலையுமால்கொள்காந்தியிற - புண்ணியச்சடைநிலாப்பொங்கிவார்தலில் - எண்ணருந்தன்விறலிழிந்திளைத்ததே. ௬௦௨

முத்தொழிற்சிவந்தனின்முளைத்தவிண்டுவும் - அத்தகுசிவகலையணையுமாதலிற் - சித்தொளிர்காந்திமால்சிவனையம்மையை - நித்தலுங்கருஷணநெறியிலீர்க்குமே. ௬௦௫

ஆவகைநிகழ்தரவம்மையன்பொடு- தேவநம்பரம்பொருட்டிருவடித்துணை - ஆவலின்வணங்கினளையவிங்கெழு - மோவருகாந்தியேதுரைத்தியாலென்றாள்.

மங்கையங்குணர்தரமதிமிலைச்சிய- சங்கரனவின்றனன்சலசநேர்திருச்- செங்கணான்மகப்பெறச்செய்தவத்தினி- னங்கிமானுமிழ்ந்ததிவ்வனலமென்னவே.

தருக்கினரறியொணாத்தாணுதற்பர - உருக்கிளர்விண்டினுக்குதவிநல்வர - மிருக்கவிக்காந்திநோயிறையின்மாற்றநீ - பொருக்கெனவெழுந்தருள்புரிதியாலென்றாள். ௬௦௬

சங்கரிபரையுரைசயம்புகேட்டலு - மங்குநீவருகெனவம்மைபாகமாய்ப் - பொங்கியசிவகணம்புடைபராவிடச் - செங்கணானிவர்ந்தனன்செயமுழங்கவே.

அரகரசிவசிவவனாதிதற்பர - சிரகரவரநதிமதிதிகழ்ந்தொளிர் - பரகரமாவுரிபரித்ததோழமுப் - புரகரவெனச்சுரர்முனிவர்போற்றினார். ௬௦௮

திருந்தவந்தனைபுரிந்தெவருஞ்சேரவே - கருந்தவவிழியுமையோடுகாரணன் - இருந்தவர்க்கருள்புரியின்பபூரண-னருந்தவக்காட்சியங்கரிக்குநல்கினான். ௬௦௯

**வேறு.** மனாதிகளுமளப்பரியனடியர்பங்கன்மழவிடையினிவர்ந்தருளிவந்தபோதிற் - றனதிதயதாமரையிலன்புகாலுந்தனிநேயதீபவொளிதயங்கவேற்றி - அனாதிமலவிருளிரியச்சிவரூபங்கண்டருந்தவநாரணனெழுந்தங்கமலன்பாத - முனாதிவளப்பணிந்தேத்தக்கருணைகூர்ந்துமுக்தசிவதற்பரனுமொழிவதானான்.

ஆகமிகநலிந்தயர்ந்துபுனலேகாற்றேயாதபமேபனியாதியலசநோற்றுச் - சோகமிகக்கவன்றனைநின்றவமேபோலத்தொல்லுலகிலெவர்புரிந்தார்சுகமுலாநின் - மோகமிகநயந்தனனாரணனேநின்னைமுதலடியர்பாலமைக்கமுன்னினேஞ்சீர் - ஓகமிகவருள்வமெனச்சிவபிரானுமுரைத்திடலுந்திருமாலுமுரைக்கலானான். ௬௧௧

**வேறு.** சம்புசிவதிகிரியருட்டருபகவவிதழிநதிசடையிற்சூடி - வெம்புசுரன்மதிமுதலெண்வகையுறப்பின்விசுவனனிவிழைவினுடுங் - கம்புருவக்குழைமுதலேயடியேனுக்கோர்மகவுகருணைசெய்து - நம்புநமதிடரகற்றியாள்கவெனமால்பணிந்துநவின்றிட்டானே. ௬௧௨

**வேறு.** அந்தவுரைக்குளங்கசிந்துசிவபிரானுமருளலொடுமுமைமனத்தினுற்ற வெள்கி - நந்தமைப்போலிவளுமொருசத்தியென்றேநண்ணுநமக்கிளையளென்றேநயனிலாமல் - இந்தவிரகரிமனத்தினெனையோசற்றமெண்ணிமதித்திலனெனக்கண்டிறையினெல்லை - சிந்தையழன்றரன்விழித்தீயிடைநின்பாலன்சிதைகவெனக்கழறியிவைசெப்பினளே. ௬௧௩

**வேறு.** ஆதியம்பகவநீயருளில்புன்மனப் - பேதைமுன்னிற்றனற்பெற்றியாகுமோ - சோதியேவருகெனத்தோகையையனைக் - காதலோடழைத்துயர்கயிலைநண்ணினாள். ௬௧௪

சங்கரியுமைதெரீஇச்சலசலோசனன் - மங்கினனுணர்வெலாமயலழுந்தினன் - நங்கையைப்பணிந்திடாநவைகொலித்திறஞ் - சிங்கினதெனமனந்தேம்பிவைகினான். ௬௧௫

ஆயதோர்காலையிலம்புயாசனன் - மாயவன்முன்னரேவந்துசாற்றினன் - தூயவப்பரைகடுஞ்சொற்பராபர - நாயகனருளினானன்றதாமென. ௬௧௬

கயிலையங்கிரியினிற்கடுக்கைசூடிய - மயிலியற்பாகனைவழுத்தவுன்னியே - செயிரொழிமாயவன்றிசைமுகத்தனோ - டெயில்பொலியவ்வரைவய்தினனரோ.

காந்தளுநொச்சியுங்கடுக்கைமத்தமும் - எந்தியசடாடவியிறைபொற்கோபுர - நீந்தருங்காவல்செய்நெறிகொணந்திதன் - சேந்தபங்கயசரண்சென்னிசேரத்தினான். ௬௧௮

ஐயநம்வருகையிங்கனைத்துங்கண்ணுதற் - றுய்யனுக்குரைத்தெமைச்சோதிமுன்னுறச் - செய்கெனவாவழிச்சேமுகத்தவன் - மெய்யரிவேதனைவிடுத்தகாலையில். ௬௧௯

கண்டனர்மறையெலாங்காணற்கெட்டொணா - அண்டனைநஞ்சமுதருந்தியன்றருள் - கண்டனைவெண்பிறைக்கண்ணிசூடியைத் - தொண்டரிலுமைமுனர்த்தொழுதிறைஞ்சினார். ௬௨0

அரிபிரமாவிவரடிபணிந்தெழத் - திரிபுரமெரித்தவன்றிருக்கண்சாத்தியே - மருமிகுபசுந்துழாய்மார்பனின்செயல் - பெருகியதோவெனப்பேசினானரோ.

கங்கையஞ்சடையமெய்க்கருணைநாயக - எங்குநின்னருளினால்யாவுமோங்கிய - விங்கெனக்கோர்குறையிசைப்பன்கேண்மதி - நங்கடம்பொருட்டெனநாரணன்சொனான். ௬௨௨

அல்லலுமுவகையுமாதியந்தமுஞ் - செல்லலுமொழித்தருள்செய்யுநாயக - பல்லுகமெற்கொருபாலனின்றியே - சொல்லருமனத்துயர்துன்னிமாழ்கினேன்.

ஐயநின்விரைமலரடியையுன்னியான் - வெய்யமாதவத்துறவிடையின்மேவினை - செய்யவோர்மதலையைச்சிறியென்பெற்றிடப் - பொய்யினல்லருளினாற்புரிந்துநின்றனை. ௬௨௪

நம்பரவாரிதிநவையினின்னிடத் - தம்பரைதிருப்பதத்தன்புசெய்கிலேன் - இம்பரோசெய்வினையிருந்தவாற்றினி - னும்பரந்நாயகியுமையசண்டமாம். ௬௨௫

அறுவகைச்சமயமுமறமுமாக்கிய-இறைவிநீபெருமகளீசன்கண்ணினால்- இறுகெனவுரைத்தனளிந்தவெம்மொழிச் - சிறுமையையொழித்தருளொன்று செப்பியே. ௬௨௬

எங்குளபொருள்களும்யாவுமாகிய - சங்கரநீயலதியாவர்தாரணி - நங்கு றைமாற்றுவர்நாதவென்றரி - அங்குறைசெய்திடவரணியம்புவான். ௬௨௭

கண்ணநம்முனிவினைக்கடந்துவாழினும்- நண்ணுநம்மன்பினர்கல்குவெம் மொழிக் - கண்ணினர்பிழைத்திடார்கவுரிதிமொழி - வண்ணமாற்றிடத்தரும் வழிகையுங்கேட்டியால். ௬௨௮

**வேறு.** மேயசொல்பிரமகற்பமுதலினின்விளங்குநம்பால் - ஆயவம்பிகைபரிக் தேயடிமுறைபரவிப்போற்ற-நாயகவுயிரின்பொம்மனவிந்தவடலத்தினென்ன - வெயனவிருகூறுகவேந்திழைதனைப்பிரித்தேம். ௬௨௯

கூறுமவ்விரண்டுகூற்றிற்கோதிலோர்கூறுதன்னை - வீறெருடுமிவளேயா கவிளைந்திடப்பாவினேற்றப் - பேறுறுமற்றைக்கூற்றைப்பெருமகவாக்கிச்சிந் தை - எறிடஞானசத்தியிலகநன்றிருத்தினேமால். ௬௩௰

குகனெனுநாமஞ்சாத்திக்கோதினங்கிரியிடப்பால்-அகமகிழ்ந்திருக்கையா ற்றியாக்குதல்காத்தல்சிந்தல் - தொகையுறமறைத்தனல்லதொல்லருளீதலெ ன்னுஞ் - செகநிறையைந்துநல்கிச்சிறந்தநற்கருணைசெய்து. ௬௩௧

மைந்தநீயிருத்தியென்றுவளங்கினமவனேயன்றி - இந்தவெஞ்சாபநீக்க வெம்மிலார்வல்லரந்தச் - சுந்தரவடிவைக்கந்தசட்டியாஞ்சுபதினத்திற் - பந்த னையகலப்போற்றிப்பாலகற்பெறுதியென்றான். ௬௩௨

**வேறு.** அத்தனங்கருளுநாக்கரிமகிழ்ந்தன-னித்தவப்பிரான்றனிநீடுநோன்பி னை - எத்திறத்தாற்றுவனென்னவீசனு - நத்தொவிர்கரதலநாதற்கோதுவான்.

**வேறு.** துலையொடுதேணன்மேடந்துலங்கியமகரமீன - நிலையுறமிடபமென் றுநிழ்த்தியவாறுமாதம் - வலவயினெஃகமேந்தும்வள்ளன்மெய்விரதாரம்பம் - நிலவுமம்மதியிற்றேன்றுநிசாபதிகலைவிளங்கும். ௬௩௪

சோதிசேர்சட்டிமுன்னாட்டியனகடன்களாற்றி - மேதகவோர்போதுண் டுவியன்புலக்குறும்படக்கி-வேதியர்க்கன்னமீந்துவிளங்குமவ்வனுக்கைபெற்று த் - தீதிலவ்விரதநோற்றல்சிறந்ததுதெளியுங்காலே. ௬௩௫

**வேறு.** பயனருள்சட்டிவைகறைபடாமுனந் - துயிலொரீஇநித்தியத்தொல்க டன்முடித்- தியன்மணிவேலனையிதயத்தேத்திவெங்- கயமுகக்கடவுணற்கழல் கள்வாழ்த்தியே. ௬௩௬

பஞ்சகவ்வியமெழில்பயில்குசோதகம் - விஞ்சவேதுவாரர்கள்விரும்புபூச னை - செஞ்சவேயாற்றிவேடெரியுமாகமத் - தெஞ்சலின்மூன்றிடத்திசைந்து பூசித்தல். ௬௩௭

பூசைசெய்வைபவம்புகல்வங்கேளனு - மாசிலாச்சிவபிரான்வழங்கன்மே யினுன் - றேசுலாமெட்டெனச்செப்புபொற்குடம் - ஆசையிற்பொலிதரவ்வற் றிஞப்பனே. ௬௩௮

கந்தவேணுயககடத்தையேற்றிவான் - முந்தியமுதிரைமாணிக்கமோய்ம் மணி - நந்தலில்குசத்தழைநாளிகேரமாச் சுந்தரச்சதங்கலைதுலங்கச்சேர்த்தியே.

நடுவுறுகும்பமேனகையிலங்குறு - தூடனுறுமுறவலுமொளிகொள்பொ ன்னினுற் - படிறறப்புரிமுதால்பயிலுங்குண்டலங் - கடிமலர்ச்சரணமாணிக்க வெற்பனே. ௬௪௦

**வேறு.** பவளமாமலையுஞ்சோதிபயின்மரகதத்தின்வெற்புங் - திவளுறுபான் மையாகத்தெய்வமான்குறமின்சேரும்- நவையறுவடிவுஞ்சாந்தநண்ணியமனமு மாக - உவமையிலன்பர்நெஞ்சமோங்குசின்மயமுமிப்பால். ௬௪௧

வன்னமாமயிலிலங்கும்வடிவொருமுகஞ்சிறந்த - பொன்னடியிரண்டுநோ க்கம்புனைதவிர்நான்குசெங்கை - நன்னிலாவீசும்வைவேனலமிகுவரதம்வச்ரம் - மின்னியவபயமாங்கண்விளங்கவேசிந்தைசெய்து. ௬௪௨

ஆவகித்தன்பினேத்தியதன்வடகிழக்கிலங்கும் - ஒவில்சீர்க்கும்பமீதினொ ருமுகநான்குசெங்கை - மேவியகமலஞ்சேவல்வேற்படையபயமின்னத் - தாவ ரும்பவ்ளமேனிதனித்தொடைதுகிலுமோங்க. ௬௪௩

சிந்தைசெய்தன்பினேத்தித்திகழ்கிழக்குறுகுடத்திற் - சுந்தரப்பொன்னே ர்மேனிதுலங்கொருமுகமிரண்டு - மந்திரச்செங்கைதன்னின்மன்னுபுத்தகமு ஞான - முந்துமுத்திரையுஞ்சாந்தமுளரிநேர்விழியுமாக. ௬௪௪

பூசனைபுரிந்துபோற்றிப்பொற்புறுதென்கிழக்கிற் - றேசுசார்கும்பமீது செறியுமீராறுசெங்கை - ஓசைகொண்மதிநேர்சோதியோரிருமூன்றுசென்னி- ஆசகறனுவேயாதியணியுநீனிறமுமாகி. ௬௪௫

வந்தனைபுரிந்துபோற்றிமன்னுதென்மேற்கினுற்ற - சுந்தரக்குடங்கர்மீதி ற்சோதிகொள்வதனமொன்று - மந்திரவபயம்வைவேல்வச்சிரம்வரதமின்னச்- சந்திரகாவிச்சேலைதயங்குபொற்கலனுமோங்க. ௬௪௬

ஈரிருபுயங்கள்சாந்தமிலங்கியசீலயேனி - தோருமனத்தினுன்னிச்செய் முறைசடாங்கமேற்றி- நோருபச்சிமத்தினிறைகுடத்தழகுவாய்ந்த - ஓராறுமுக மேதானையொளிருமீராறுசெங்கை. ௬௪௭

விளங்குருச்சிந்தைசெய்துமிகுவடமேற்கினுற்ற - தளஞ்செய்நீர்க்கும்ப மீதிற்றன்னிகர்புரிதிகோடி - கிளர்ந்தெனுஞ்செய்யமேனிகேழ்கிளர்நான்கு செங்கை - உளங்கொள்வேல்வரதமேமற்றபயமேதொடையலோங்க. ௬௪௮

**வேறு.** இத்திறன்றியானம்புரிந்துசட்குமரரிணையடிமலர்முறையிறைஞ்சி - முத்திரைநல்கிமூர்த்திவேதிகையின்முழுமனுநெறிதனினியப்பிச் - சித்தியை வேண்டியடியனேன்றந்தசெழுந்தவிசமர்கெனப்பரவிப் - பத்தியானன்னீரருக்கி யமுதவிப்பாத்தியாசமனமுமீந்தே. ௬௪௯

பஞ்சகாமுதநற்பஞ்சகவ்வியமும்பலோதகந்தேனிளநீரும் - விஞ்சியமலர்நீர்வாசநன்னீரின்விளைந்தபிடேகமேற்கமலச் - செஞ்சுடரெறிக்குமம்பரமுந்நூல்சந்திரதிலகமும்புனைந்து - நெஞ்சகங்கனிந்தட்சதைநனிபுதவிநிமலனீயருள்கெனப்பணிந்து. ௬௫௦

சண்பகமலரியம்புயப்போதுசாதிவீகூவிளத்தழையும் - விண்புகவோங்கும்பாதிரிகொன்றைவியன்சினைக்கோங்குசெங்காந்தண் - மண்புகுமுல்லையல்லிசெவ்வந்திமல்லிகைகடம்பிவையாதி - எண்புகுகுமரன்மேனியிற்சாத்தியிலங்குபூணுதியமிலைந்து. ௬௫௧

சிரமுதலாகத்தொண்டர்தமிதயச்செழுங்கமலாசனந்திகழும் - பரிவுளபாதமீறதாமேன்மையிலங்கபூசனையியற்றி - அரியவொண்டேபதீபமாதியவாலார்வமோடாரதியியற்றித் - தெரியறுசுவையிற்பாலமுதூட்டிச்செழும்புனலுதவியேபரிந்து. ௬௫௨

வெள்ளிலைபழுக்காய்நிவேதனம்படைத்துவிளங்குநெய்த்தீபவாரதியைத்தள்ளிலாதிழைத்துநாண்மலர்வசையாற்சண்முகற்சர்ச்சனைவிளைத்துக் - கள்ளவிழ்புட்பாஞ்சலிமழைத்தினியகனிமிளகுயர்ந்தபானக்கம் - உள்ளமாமுதலவேற்றனவுண்டியுவந்தளித்தின்புடனுகர்ந்தே. ௬௫௩

பூமிசைத்துயின்றங்கிரசனியொழித்துப்புலரிசார்வைகறையணுகத் - தூமலர்த்தடநீர்படிந்துநன்னியமந்துகளறமுடித்ததின்பின்னர் - மாமறையவர்க்குப்பாலனமருத்திமன்னுபாரணவினைமுற்றிச் - சேமமாப்பகலினயனமுந்துயிலாத்திறனுநச்சிவகதைவினவி. ௬௫௪

இந்தவாறுறவற்சரஞ்சட்டிவிரதமிங்கிதமுறநோற்றோர் - சிந்தையினினைத்தநலனெலாந்திளைப்பர்சித்தியெண்வகையுமெய்திடுவர் - மைந்தரைப்பெறுவருலகொருகுடைக்கீழ்வளந்தரப்புரந்தரசிருந்து - கந்தவேள்பதவியமர்ந்தனவரதங்கருணையங்கடலிடைப்படிவார். ௬௫௫

ஈதெலாமுலகுதேறுமாறினிதினிசைத்தனமெழிற்கிணையில்லா - மாதுநீயினியிவ்விண்டினுக்கருளிமனத்துயரகற்றெனமவுலிச் - சீதவெண்பிறையைமிலைச்சியபரமன்செப்பலுஞ்சிந்தைநன்கலர்ந்தங் - காதரம்பெருகநோக்கினளம்மையரவணைச்செல்வனுக்குரைப்பாள். ௬௫௬

மாயநீயிந்தவிரதநோற்றொழுகின்மாசெலாமொழிந்துநாமுரைத்த - தீயவெம்மொழியுந்தீர்ந்துமேலானசேயுமொன்றெய்துமென்றருளி - யெயினன்புதல்வனம்பிராநேக்கத்திறந்துபின்னணங்கனுய்த்திகழ்வன் - ஆயவனுலகமன்னுயிர்க்கின்பமோகமீன்றருள்வனென்றுரைத்தாள். ௬௫௭

**வேறு.** தந்தையனையருண்மொழிகேட்டரியுமன்னோர்சரணமலர்பணிந்தேத்தித்தாவிலாத - கந்தமலராசனனுமருங்கினேகக்கடைத்தலைவாய்நாதிவிடைகவினப்பெற்றுச் - செந்துகிலைச்சிந்துதிரைச்சிந்துசூழுஞ்செகம்புகழ்சீர்க்கந்தசட்டிவிரதநோற்பச் - சுந்தரமாரழகொழுகுதருணமேனிச்சுதனுமதனும்பேரிற்றோன்றினனே. ௬௫௮

**வேறு.** வந்தமன்மதன்வாளிபொருந்தனு - முந்துநாண்வளர்மொய்ம்புடைச் சேனைகள் - நந்தலில்லனநண்ணியதேர்பரி - சந்தமார்மலராதியங்கவே. ௬௫௯

மைந்தர்மாதர்மயல்கொண்மலர்க்கணை - சிந்திமுந்துசிவன்விழியங்கியின் - வெந்துவீதலுமேவுமவன்மனை - வந்துவேண்டவயங்கருவாக்கினன். ௬௬௦

ஆகியேதொழிலாற்றியிருந்தனன் - மோகமங்கவனின்றிமுடிவுறு - நாகர் போற்றிசெய்சாமனுநண்ணினன் - ஏக்னென்பெவர்கட்குமினிதரோ. ௬௬௧

**வேறு.** மதிநிகழ்துலையினீமெதிவளர்பிரதமாதி - யதிநிகழ்சட்டியீற்றினியன்றநற்றிதியேவேற்கை - நிதிபதிவிரதமாகுநேரிலையிதற்கோர்நோன்பு - புதுமயிலூருநம்பன்பூசனைக்குவந்ததாமே. ௬௬௨

பன்னிருமதியினேனும்பாங்குறுசட்டியாவும் - முன்னவனுமையாண்மைந்தன்முழுமணிமகுடமோங்குஞ் - சென்னியனிராமயன்சீர்த்தேவசேனாதிநாதன் - வன்னமாயூரவள்ளன்மனமகிழ்திதியதாமே. ௬௬௩

ஆங்கவைதன்னிலானியணிபூர்வசட்டிமிக்க - காங்கெயகுமரன்சட்டிகதிரரிநிறையுஞ்சட்டி - தேங்கியபானுசட்டிதேனுயர்சட்டிநோன்பு - பாங்குறுசுப்ரமண்யன்பயில்சம்பாசட்டியாமே. ௬௬௪

தனுமதிப்பூர்வசட்டிதருவிநாயகனற்சட்டி - அனையனதினங்கடம்மினமருப்பொருட்டாக்கந்தன் - சினமுறுமசுரர்ச்செற்றசீர்மதிப்பூர்வபக்கந் - தனைநிகர்கந்தசட்டித்தனிநோன்புயார்க்குமாமே. ௬௬௫

பிரதமையங்கிதேவன்பேசருந்துதியைவேதன் - திருதியையுமையாண்மிக்கசிவம்புகல்சதுர்த்திமுன்னோன் - பரிவுசெய்பஞ்சமிக்கட்பற்றுறுமாதிசேடன் - விரிசட்டிசுப்ரமண்யன்மிகுமதிதேவராவார். ௬௬௬

மதிகலைகூடுநாளின்மருவுமுத்தாபனச்சீர் - அதின்விதிபலவாக்கூறுமாகமபுராணநூல்கள் - துதியுறுபுலமைசாலுந்துறைமுனியவற்றுளும்ம் - இதமுறுநியதியாவுமியம்புவனென்றுசொல்வான். ௬௬௭

நியம்படுசெமையினீற்றினெறிகொள்வைகறையினேனுங்கு - நயம்படுசேக்கைநீங்கிநணுங்குகதீர்த்தமாடிப் - பயம்படுநித்தகன்மம்பயின்றுபின்சிவபுராணம் - வியம்படக்கேட்டுக்கந்தவேளிருபதங்கண்முன்னி. ௬௬௮

கந்தனைக்குமரர்தம்மைக்கவின்கிடந்தொழுகுங்கொங்கைத் - தந்தியைவள்ளிதன்னைத்தக்கபொற்றகட்டிற்றீட்டி - மந்திரவிதியிற்பூசைம்மாலையம்பொழுதியற்றிப் - புந்திசான்மண்டபாதிபொலனுறப்புரிந்துபின்னர். ௬௬௯

தேசிகனுடனேயாறுசீர்கெழுமறையோர்ப்போற்றிப் - பூசனைபுரிந்துமேலாம்போதகமுகனைவாழ்த்தி - ஆசகல்சங்கற்பாதியமையுநற்பொருளின்சுத்தி - ஏசறப்புரிந்துவேதியிடத்துவாலரிவிரித்து. ௬௭௦

முருகவேள்கும்பமேற்றிமுகுணகைத்தேவிமாரின் - பெருகியகும்பநாட்டிப்பின்னர்மும்மூன்றுகும்பம் - மருவுறக்கிழக்குமேற்காவைத்துப்பின்றுகிலேயாதி - பரிவொடுசாத்திப்போற்றிப்பரப்பியேயரிசிதென்பால். ௬௭௧

தெக்கிணந்தொட்டுநேராச்செப்பியவடக்குமட்டு - மிக்கநால்வரைகள்கீறி மேலேநின்றுதயங்காறும் - புக்கநால்வரைகள்கீறிப்பொருந்தொன்பான்மனைநடுக்கட் - டக்கதோர்தகட்டிற்செவ்வேடனதுருப்பொலியவைத்தே. ௱௭௨

பாங்கினிற்றேவிமாரின்பகர்தகடிறப்பதித்துத் - தேங்கறுகுமரர்மேனிதிகழ்தருதகடியாவும் - ஓங்கியவீசானதிஉயர்வாயுவீறுவய்த்து - நீங்கலில்கும்பவாமநிலவவோராறுகோணம். ௱௭௩

நடுவணோர்வலயமிட்டுநவையிலோங்காரந்தீட்டித் - தடையிலாவெழுத்தக்கோணந்தம்மிடைச்சாலநாட்டி - விடையினான்மகனையாங்கண்விருப்பொடுபூசையாற்றி - வடிவமைதினையின்பிண்டிமணிவிளக்கேற்றிப்போற்றி. ௱௭௪

ஆகமமுறைவளாமலருச்சனைவிதியினாற்றிச் - சேகுறுநான்குசாமந்திகழ்வில்வத்தழைசொரிந்து - யோகமார்குமரவேளினுயர்மனுவதனைமோன - பாகமாவோதிமுக்காற்பரிவொடுவலம்வந்தேத்தி. ௱௭௫

பந்தமதகற்றியாளும்பன்னிருபுயத்துவேற்கைக் - கந்தவெம்பவங்கணீக்கிக்கருணைசெயென்றுமூன்று - மந்திரார்க்கியத்தைவேளின்வலக்கரமளித்துப்பின்னர் - முந்துகூடாந்தவங்கிமுகத்தினிலோமஞ்செய்தல். ௱௭௬

பூரணவோமமுற்றிப்புலரிவந்தணுகப்பின்னர் - ஆரணப்பொருளைப்பூசித்தருந்தசும்பாலமூழ்கி - நேரணிநீழலோக்கிநெய்மகாதானஞ்செய்து - காரணக்குருவும்வேதகலைஞருங்களிப்பக்கண்டு. ௱௭௭

பொருள்குகவடிவங்கும்பம்பூதலம்பிறவுமீந்து - கருதுதம்பதியின்பூசைகபிலையின்பூசையின்ன - அருமறையாளர்க்கீதலாதியதருமமாற்றி - உரிமைசால்பரிசனத்தோடுண்கவென்றுரைத்தார்மேலோர். ௱௭௮

சட்டிநோன்பிந்தவாற்றாற்சண்முகனுள்ளத்துக்கேற்ப - மட்டில்பேரன்போடாற்றுமகான்களிவ்வுலகமீதின் - அட்டவைஸ்வரியமோங்கியட்டமாசித்திதேங்கிக் - கட்டெழிற்கந்தவேளின்கழலிணைமருவுவாரே. ௱௭௯

**வேறு.** கும்பமுறுகுறுமுனிவவிந்தநிட்டைகுவலயத்தினியற்றினர்கள்கோதிலாது - வெம்புபெரும்பிறப்பகல்வர்பாதகாதிவிளிந்தொழிந்துபரிதிமுனர்மேவுகின்ற - பம்புநெடுமிருளாகுமஞ்ஞானதிபற்றிவெழும்பாசமலம்பற்றுதீமை - இம்பரிடையடையாதுநிசமேயென்னவினியபலனுன்மிகுதியியம்புமாதோ.

இத்தகையநன்மொழியைக்கேட்டுமேலாமிறைவனெனுங்கந்தமுருகேசன்பாத - மெத்துநெறிப்படிபணிந்துமோனஞானவிமலவிந்தநெறியன்றிவிபுலையுற்றோர் - தத்தமுணர்வேற்றவழிநின்னைப்பூசைதனைப்புரியினும்பொருள்கள்சாருங்கொல்லோ - அத்தவெமக்கருடியெனஞானமூர்த்தியகத்தியனுக்கினியமொழியருள்வதானான். ௱௮௧

மானதவெங்கனலினிடையிச்சையாதிவற்றல்விறகூட்டாதுசிவயோகத்து - ஞானமணிநீர்சொரிந்துதத்துவத்தினலம்பொலிசந்தனமேறிநண்ணுவோருக் - கீனமிலையனந்தகலைமருவுமெம்மையிசையுமிசைகந்தசட்டியியலுநாளி

ன் - மோனமுறப்பணிந்தோர்கள்பூசைசெய்வோர்முன்னுசிவஹீர்த்தனங்கண் மொழியுமேலோர். சுஅஉ

புண்ணியமார்சிவதொண்டர்க்கனமளித்தோர்புலையுநமதாலயத் திற்புளை யிலானின் - வண்ணமணிநெய்த்தீபமிலகவைத்தோர்மதூரங்கிறையாவின்பால் கிருதமற்றும் - எண்ணுமனுமந்திரத் தில்பிடேகித்தோரிசைபஞ்சதூபமுறை யிட்டோரின்ப - நண்ணுமலர்மருவ. தியலங்கரித்தோர்நமதுளைபுரவரிடத் தி னணுகாபாவம். சுஅங

இவ்வாற்றினியற்றுதற்குமசத்தரென்னினிணையினமதாலயநன்றிலங்கமர் சு - தவ்வாதுநீக்கிமிகுகோலபாக்கித்தழையனகதற்பரமதாவிலாத - செவ்வா ன கிகருமணிமேனிநாதசெறுசூரசங்காரதேவதேவ - வெவ்வாரிபருகருணவேல வென்னில்வினையகலுநமதருளுமேவுவாரே. சுஅச

**வேறு.** கந்தவேளருள்கனிந்துகந்தசட்டியினன்மேன்மை - சிந்தனைபொலிந் துதாழுஞ்சிறுமுனிக்குபதிசிப்ப - அந்தணன்வினவியேலையாறிருபுயத்தனேன் பு - மந்திரமுறைபுரிந்துவரதமெஞ்ஞானமுற்றான். சுஅரு

தவமலிகும்பயோனிசலதியேழுஞ்செங்கை - குவிதரவெடுத்தயின்றான் கொடியர்தங்கிளையைமாய்த்தான் - புவியினேச்சமம்புரிந்தான்புராரிநற்காட்சிந ல்கக் . கவலையின்யோகநீடிக்கருணையோடிலங்கினானே. சுஅசு

இந்தநற்காதைகற்றோரெழுதினோரன்புசெய்தோர் - முந்தியபாவம்போக் கிமுதிர்கந்தசட்டிநோன்பு - நந்தலில்லாமலாற்றுநற்பலன்பெற்றுவாழ்ந்து - க ந்தவேளுலகஞ்சேர்ந்துகளிப்பரென்றறைந்தான்சூதன். சுஅஎ

அகத்தியச்சருக்கம் - முற்றிற்று.

விருத்தம் - கூசாகூ.

## ஆறாவது

# சூரசங்காரசட்டிச்சருக்கம்.

மிதருள்விளைகந்தசட்டிசெழுஞ்சுடரயில்வேற்செவ்வேள் - மருள்விளை சூரோடாடியமம்புரியாறுநாளாம் - அருள்விளைகுமகன்மீதிலன்புசெய்முனிவீ ரன்ன - பொருள்விளைசரிதமின்னேபுகல்வனென்றறைவான்சூதன். சுஅஅ

விந்தத்திற்றருக்குஞ்சூரன்விண்ணவர்க்கலக்கணுற்றி - ஐந்தருவிமானம் வைகுமமரர்கள்பரிக்கமீனஞ் - சந்ததமியற்றிமேலாஞ்சதுமறையொழுக்கம்பா ற - வெந்தொழில்புரிந்துமீளாவிழுமமேபலவுஞ்செய்தான். சுஅகூ

தீத்திறனிமயவர்க்குச்செய்திடுசூரபத்மன் - பூத்தலைச்சேவலானபுரந்தர ற்சிறையினிட்டு - மாத்திகழ்சசியைத்தன்பால்வசஞ்செயக்கருதியாங்கண்- மூ த்தவணிகருமாதர்மொய்ம்புடையசுரர்க்கூவி. சுகூ0

சசியொடுமகவாற்பற்றித்தருகெனவசுரரேக - நிசிசரர்வரவுநேடிநிலவியகு யிலின்மேனி - இசைவுறீஇமனையொடிந்த்ரனீரறுநாமமெய்தித் - திசையெ லாம்பரவுஞ்சீர்த்திச்சீகாழிவனத்துச்சென்றான். ௬௧௧

வரையுருக்கொண்டுமேலைமாதவம்புரியுமன்னோர் - மருவிளைதுடவையீட் டிமலர்கொடுபூசையாற்றி - அரிதுறவசுரர்தீமையதிகரித்தாலிகுன்றக் - கரிமு கனருளாலிந்த்ரன்காவிரிபெருகச்செய்தான். ௬௧௨

விண்ணவரசுரர்தீமைசகிக்கலார்வேணுவான - அண்ணலையடைந்துகூற வரிகரபுதல்வனேவல் - வண்ணமாகாளன்போற்றமனைசசிவைத்துமாறில் - க ண்ணகன்கயிலைநோக்கிக்கரியவன்சுரர்முற்சென்றான். ௬௧௩

**வேறு.** சிற்பரமரெழுந்தருளுங்கயிலைமலையதனினிடைச்சென்றுமகவான்மு தலாந்தேவர்மேவக் - கற்பகவிண்டுறந்துமணிற்றவம்புரியுநலன்பொலிந்தகவி ன்செயயிராணிதனைக்கலதிநேரும் - பொற்பகந்திரசமுகிதன்சகியெனுந்துன் முகியினுடன்போந்துகரம்பற்றிவலிந்திழுத்தபோதிற் - கற்பகச்செய்வலிகெ ழுமாகாளனவர்கரங்கடமைக்கடிந்தகற்றமகேந்திரத்திற்கவன்றமீண்டார்.

**வேறு.** சூரனுமன்னவன்பாலவர்களைகித்தோகையிந்திராணியைநாஞ்சோலை யினின் - நேருறவேகண்டவிளைநினைக்கேயாகவினைத்தடுக்கவிரின்மாகாளனெ ய்தித் - சாருமெங்கள்வயந்திறுடன்கரமுஞ்சிந்திச்சசியையுமீட்டனன்றான் சாதமீது - வீரனேயெனக்கலுழுவவன்வெகுண்டுவெய்யவனைச்சினந்தானைவிடு த்தானன்றே. ௬௧௫

சதுரவிதச்சேனையயல்வரச்சினந்துதபனுரிதரணிதனின்மேவுமுன்னர்ச் - சதுமகனும்பரம்பொருளைத்தரிசனஞ்செய்தருமமயம் பெற்றிலனுத்தரணிமீண் டான் - விதுமுகத்தாளவணிகழ்ந்தசரிதமெலாம்விரித்துரைப்பவவளோடுமே ருவுற்றான் - கதுமெனவேயிரவிபகைவனமடைந்துகவினுரும்புலோமசையை க்காணுனுகி. ௬௧௬

விண்ணுலகுபுகுந்துமகவான்மகனைவெம்போரின்வருத்தியவற்றேவர்கூ ட - எண்ணரியசிறையினுய்த்துச்சொர்னலோகமெரியருந்தவிருந்தளித்தானி ப்பால்வாசத் - தண்ணமலர்க்குழற்சசியைக்குருவினில்லந்தனிவிருத்தியமரரு டன்சலசமேவும் - புண்ணியனும்மாலவனுமுன்னரேகப்புரந்தானுங்கயிலைமலை புகுந்தானன்றே. ௬௧௭

சனகன்முதனால்வருக்குஞ்சிவபெம்மானற்றனியோகமுறைத்தருளித்தாவி லாத - பனிவரைக்குமகளாகவிமலைதன்னைப்பண்டருளிநெடுங்காலம்படரவ ன்னே - வினவுபுரந்தரனிமையோரம்புயத்துவேதன்மொழிப்படிமாரன்விமலன் மீது - கணைசுரும்புநாணேற்றிமலர்தொடுத்துக்கடுகியயல்நின்றேவக்கருணை வள்ளல். ௬௧௮

அம்மையுரைப்படிநோக்கமுந்தையூழினதனலேவெந்துடலஞ்சாம்பரா க - விம்முசுரர்சூழ்ந்திரங்கவிமலைதன்னைவியன்வதுவைபுரிந்தருளிவிரைவினும் மை - அம்மபுரந்தருள்வமெனமணம்புரிந்தேயயிலைசிகர்விழியிரதியலக்கண்மா

ற்றித் - தெம்முனையாமதனனையங்கருவமாகச்செய்தரசும்பெருந்திருவுஞ்சிறப்
பத்தந்தான். ௬௯௯

**வேறு.** செஞ்சடைவேதகீதன்சிலையினைமணம்புரிந்து - மஞ்சடைகயிலைசெ
ன்றுவானுளோர்பலரும்வேண்ட - விஞ்சடையாளமாகவேதஆகமங்கடேடும் -
பஞ்சடைகவினும்பாதப்பார்ப்பதிவெருவிநீங்க. ௭௦௦

மதியணிசடிலத்தெந்தைவதனமோராறுகொண்ட - ' நுதல்களின்விழியி
னாலேநுண்பொறியாறுநல்கி, - எதிருறுமங்கிகையினீந்திடவங்கிதானும் - அதி
னுயர்வெம்மைதாங்காதனிலமீதுய்த்தானன்றே. ௭௦௧

மெய்யுடன்கானடுங்கவிதிர்விதிர்த்தனிலன்றானும் - பையவேகொணர்ந்
துகங்கைபாணியினுய்த்தகாலைத் - தூய்யதன்மகவையேந்திச்சுருடிரைக்கரத்த
ணைத்து - வையமெண்சரவணப்பேர்வாவியினுய்த்ததன்றே. ௭௦௨

தனிமுதல்பாலனாகிச்சரவணஞ்சார்ந்தபின்னர் - அனகனதிடப்பாலம்
மையனற்பொறிக்காற்றாளாகி - நனியுளம்வெருவியோடிநம்பனுமழனுந்தா
ன் - எனவறிந்துவகைகூரவிறைவனதிடத்துமீண்டாள். ௭௦௩

சங்கரியிரிந்தகாலைத்தளிரடிநூபுரத்திற் - றங்கியமணிகள்சிந்தித்தரையி
னிற்பீடத்தலோடும் - வெங்கரியுரித்தோனோக்கமேலைநன்மணிகளெல்லாம் -
மங்கையருருவம்வாய்ந்துமாறிலாதிலங்கிற்றன்றே. ௭௦௪

மாணிக்கமுத்துநீலம்மரகதம்வயிரந்துப்பு - பூணித்தபுஷ்பராகம்பொருந்
துகோமேதகத்தோ - டேனுயர்வாலவாயசத்தணியிமைக்குமின்னார் - தானு
நம்பரனார்செய்யசரணினின்மோகமுற்றார். ௭௦௫

மங்கைபங்காளனந்தவனிதையர்தம்மைநோக்கப் - பொங்கியகருப்பமானு
ர்பூரணியெனைத்துமோர்ந்து - பங்கமின்மகளிர்நீவிர்பற்பலகாலமாக - இங்கு
றுசூலினோடிருமெனச்சபித்திட்டாளே. ௭௦௬

குடமுலைப்பணைத்தோண்மாதர்கூறுமம்மொழியைக்கேளா - உடல்பனி
த்தயரவேர்த்தாருமாபதியருளினாலே - இடிபுரைகடியவெஞ்சொலிலக்கரவ்வே
ர்வுதித்தார் - கொடியிடையஞ்சிலோதிக்குமரியும்வியந்துகண்டாள். ௭௦௭

மற்றவர்கருச்சூன்மீதுமாலயனுணராதுற்ற - கொற்றவனருளினாலேகூ
றருநந்திபாலின் - உற்றுயரொன்பதின்மருயர்சிவபதம்புனைந்தோர் - தெற்றெ
னச்சார்ந்துவீரச்செல்வராய்த்தவஞ்செய்துற்றார். ௭௦௮

பற்பலகாலமாகப்பாவையர்கருவாற்றுதங் - கற்புதமூர்த்திமுன்னரனுரு
ளியையன்பாலார் - உற்பலவிழியைநோக்கியொண்டொடியார்கட்கேற்ற - நற்
பலப்புதல்வர்தோன்றநயந்தருள்புரிதியென்றான். ௭௦௯

அம்மையவ்வாறுசெய்யவவிரிழைமகளிர்யாரும் - விம்மியதடம்புயத்துவீ
ரவாகாதியான - செம்மல்கொளொன்பதின்மர்சேர்ந்துடன்சிறக்கநல்க - அம்
மரபுணர்ந்துதேவரார்த்தனரகங்களித்தார். ௭௧௦

சாரதரமரர்சித்தர்சாரணர்மகதிவீணை - நாரதர்முதலோர்போற்றநாயகியிடப்பாலாக - நீரதச்சுவேதவேற்றினின்மலனேறிவெள்ளிச் - சாரதச்சிகரநீங்கிச்சரவணப்பொய்கைசார்ந்தான். ௭௧௧

விடையிவர்ந்தமலன்மேவமிகுமலர்ப்பொகுட்டில்வேதக் - கடையவன்சிவனேயம்மைகாலனல்கங்கையாரற் - குடையவோரொன்றிரண்டாவுயர்மூன்றுநான்கைந்தூறு - வடிவெலாங்கொண்டானன்றன்மகிமையார்வருக்கற்பாலார்.

அச்செயல்கண்டவானோரனைவருமதிசயித்தார் - சச்சிதானந்தமேலோன்றனதிடப்பாகமான - பச்சிளங்குயிலைநோக்கிப்பாவைநீநமதுபாலன் - முச்சகம்புகழ்மேலைமுருகவேட்கொணர்தியென்றான். ௭௧௩

**வேறு.** வாரேறுகொங்கையுமைமங்கைவென்றிவளரோற்றினின்றமொருவி - நாரேறுமன்பர்செயலொன்றலாதசகநாமாதிகட்குமரிதாம் - ஓராறுமேனியுடையாரையன்பினுடனேயெடுப்பவவருஞ் - சீராறுடைந்துதிருநான்குமூன்றுசெறியுரண்டொன்றென்வடிவாய். ௭௧௪

ஈராறுபாணிமுகமாறதாகியெழில்கொண்டபாலன்வடிவாய் - ஆராதகாதலுமைசெங்கைமேவவனையாளெடுத்துமகிழாப் - பேராறுதிங்களணிநாதனங்கைபெறநல்கியம்மைவிடையிற் - சேராமகிழ்ந்துதனமூறபாலொர்சிறுகிண்ணமீதிலுதவா. ௭௧௫

அப்பாவெனுசைமகனேசுபோதரதவமிழ்தம்விளைந்துணைவே - ஒப்பாருமின்றியுலகெங்குமானவொருவன்பசித்தழலினால் - எய்ப்பாரருந்துபரிசாயருந்தஇமையோர்கணம்பரவினார் - செப்பானகொங்கையுமைமைந்தனோடுசிவனங்கன்யார்க்குமருளா. ௭௧௬

**வேறு.** பாயுமால்விடையூர்ந்துபளிக்கொளி - சாயுமேலைச்சயிலத்தணுகினான் - சேயுமொன்பதுவீரருஞ்சீர்பெற - மேயலக்கருமேவியனைந்தனர். ௭௧௭

ஆடலம்புயத்தான்முதலாயினோர் - பாடுசேரப்பரன்மகன்பாரெலாம் - ஆடல்செய்தரியாதியராருயிர் - கோடல்செய்தவர்கோதமகற்றியே. ௭௧௮

மீண்டுமாருயிர்நல்கிவிளைந்தவர் - வேண்டுபூசனையாற்றிடமேவியும் - மாண்டநாரதன்மாமகந்தோற்றியே - ஈண்டுமேடத்திவர்ந்ததையூர்ந்துமே. ௭௧௯

**வேறு.** பாரெலாம்படைத்தபிரமனுமுதுவன்பத்திசெய்தடியினிற்றாழாச் - சீரெலாமுணர்ந்துமாமறைமுதலாச்சேரெழுத்தொருபொருள்வினவ - வொரெலாங்சருகியெண்கணன்மயங்கவிடியெனச்சிரந்தனிற்புடைத்துக் - காரெலாம்படியுங்கந்தவெற்பதனிற்கடுஞ்சிறைபுரிந்துலகளித்தான். ௭௨0

தண்டுழாயலங்கன்மாமனுஞ்சிவனுந்தண்ணளிபெருகவேவேண்ட - முண்டகாசனத்தன்சிறையினைவிடுத்துமுதல்வனுக்கப்பொருளுரைத்தே - பண்டுசேர்பொதியக்குறுமுனிக்கருளிப்பதுமனற்சட்டிநோன்பியற்றக் - கொண்டிடுமலங்களொழித்துநல்வரமுங்கொடுத்தனன்சண்முககுமரன். ௭௨௧

ஆருயிர்க்குயிராயகமுமாய்ப்புறமாயனகமாயகண்டமாயான்ற - பேருயிர்ப்
பொறையாயிருந்தருள்காலைப்பிரமனேமுதலியவமரர் - சூருயிர்ப்பெறிந்தாலொ
த்தொனச்சுழன்றுசூரர்கோன்கொடுந்துயர்க்கிரங்கி - மேருவிற்குழைத்துத்திரி
புரஞ்சிரித்தவிண்ணவன்கயிலைவெற்படைந்தார். ௭௨௨

நந்திதன்சரணபங்கயம்பரவிநாமெலாஞ்சூரனான்மெலிந்தோம்- புந்திகொ
ண்மானம்பேரறிவாற்றல்பொறையெலாம்போயினபுனித - அந்திவண்சடிலத்
தண்ணன்முனணுகியடியநம்வரவுணர்த்தெனலும் - முந்தியவினைகண்முடிந்தி
டுங்காலமுற்றியதெனவவர்க்குரைத்தான். ௭௨௩

வேறு. பொன்னலரிதழிகங்கைபுனைந்தவன்றிருமுன்பெய்தி - அன்னிலைபு
ரைத்தலோடுமவரையிங்கழைத்தியென்ன - முன்னறிநந்தியுய்ப்பமுராரியே
யாதியானோர் - நன்னலப்பொருளாஞ்சோதிநாதனைக்கண்டாரன்றே. ௭௨௪

தத்துவமுடிவிலாடுந்தாண்டவதனிமையான - சித்தனேயோகர்க்கெட்டா
ச்செல்வனேசிவனேஞான - நித்தனேயடியேஞ்சூரானெடுந்துயர்ப்பட்டுழந்தே
ஞ்- சத்துருவறிவுந்தீர்ந்தேந்தண்ணளிதருதியென்றார். ௭௨௫

மாதவனாதியானோர்வழங்குமவ்வுரையைக்கேட்டு - நாதனீரஞ்சவேண்டா
மெனநயந்தருளிப்பாங்கர் - மாதுமைமடியின்வைகுமைந்தனைத்தழீஇயணைத்து
- மேதகுமருகிருத்திமேலிவைவிளம்பலுற்றான். ௭௨௬

வருதிநம்மதலாயிந்தவானவர்க்கலக்கணாற்றிக் - கருதிமெய்த்தீமைசெய்
துகடவுளர்க்கரசைக்காய்ந்து - சுருதியினொழுக்கைமாற்றிச்சுரருலகழித்துவா
ட்டிக் - குருதிவேற்சயந்தனாதிக்குழுவினைச்சிறையினுய்த்து. ௭௨௭

நிற்றலுந்தீங்குநாடுநிசிசரர்தம்மைச்செற்று - வெற்றிசேர்சூரனாதிவீரரைவி
ரைவினட்டே - உற்றவித்தேவர்கோமானுறுகுறையனைத்துந்தீர்த்து - மற்றிவ
ண்வருதியென்றான்மாலயற்கரியவள்ளல். ௭௨௮

தன்னருட்படியுமேகாதசவுருத்திரரையாந்த - முன்னவன்படையாத்தந்து
மூவுலகண்டமெல்லாங் - கன்னலொன்றதினொடுக்கிக்கடிதுபின்னருளும்பா
ன்மை - மன்னியசெவ்வேலாக்கிமதலைகைக்கொடுத்தானையன். ௭௨௯

பின்னருமிரதமொன்றுபெட்புடனருளினல்கி - என்னருமகனேபூதரெறு
ழ்வலிநம்பிமாரோ - டின்னல்கொடேவர்க்காக்கவேகுதியென்னலோடும் - மு
ன்னவனவர்கடாளின்மும்முறைவணங்கிச்சென்றான். ௭௩0

தேவர்பல்லாண்டிசைப்பச்சித்தர்கின்னரரியம்ப - மூவர்கண்முதல்வன்
பூதர்மூரிநீர்க்கடல்வளைப்பத் - தாவரும்பணிலநேமிதரிப்பவன்பிரமன்வாழ்த்த
ப் - பூவுலகதனிற்செவ்வேபோந்துதென்றிசையிற்புக்கான். ௭௩௧

அப்பொழுதயன்சேயானவரியநாரதனார்போந்து - துப்பிதழ்க்கவுரிபால
ன்றனையடிவணங்கியையா - தப்பிலாத்தவஞ்செய்மேன்மைசாரகத்தியன்சபி
ப்ப - ஒப்பருங்குன்றமாகவுற்றனன்கவுஞ்சத்தியன். ௭௩௨

அம்மலையொருசார்மாயாபுரத்தினிலசுரர்போற்ற - விம்முவான்கரடக்கைமாவேழமாமுகத்தனென்போன் - அம்மபல்சேனையோடமர்ந்தனனவனைச்செற்று - வெம்முனைச்சூரற்கோறல்விழுமிதாமென்னலோடும். ௬௩

தாரகனகிரிசிந்திச்சண்முகவரதமேலோன் - நேர்பொருசேனைமாய்த்துநிறைதருமாயையாற்றிப் - பேருறுகவுஞ்சந்தன்னைப்பிளந்தொளிவிலகிவீசும் - ஓர்பெருஞ்சத்திதன்னாலும்பரினிடரொழித்தே. ௬௪

தாரகப்பொருளாமேலோன்றாரகன்றனைத்திரித்து - நேர்கரியானமாக்கிநின்றுவியேகந்தவெற்பிற் - பேரதத்தாரகன்றன்பெருஞ்சமரழிந்துமாய்ந்த - சார்தர்க்குயிருநல்கித்தானையோடொருங்குசென்றான். ௬௫

கந்தவேளனுசர்கூடக்கடவுளர்குழுமிவாழ்த்த - அந்தமில்பூதர்சூழவணிகொள்பல்லியமுழங்க - மந்திரப்பொருளாந்தேவகிரிவரைவந்துதந்தை - நந்திவில்கருணைமேவநயந்துவீற்றிருந்தானன்றே. ௬௬

தாரகன்சமரிற்சாய்ந்ததன்மையுஞ்செயலுந்தேர்ந்து - சிரசுரேந்திரப்பேர்ச்சிறுவனத்தந்தையாதி - ஒருறுதமருக்குற்றகடனெலாமொல்லையாற்றி - வீரமாமகேந்திரத்தின்மேவிவெஞ்சூரற்கண்டே. ௬௭

மதங்கமாமுகத்தன்செய்கைவகுத்தனன்வழுத்தலோடுங் - கதஞ்செறிசூரபத்மன்கவன்றுளம்பின்னர்த்தேறிப் - பதங்களிற்சதங்கைதங்கும்பாலனோதாரகன்றன் - சதந்தருமுயிரோடன்னோன்றனுப்புரிதடியவல்லான். ௬௮

பெருவனமர்முடிப்பன்பெரிதெனவெழுந்தகாலை - ஆருயிரமோகனென்னுமமைச்சனதுரையினீராற் - போர்தருசிந்தைதீர்த்துப்பொலிபகன்மயூரன்சேனன் - சோர்வறுசக்ரவாகன்சுகன்முதலானதூதர். ௬௯

தங்களில்விழிபரப்பிச்சண்முகன்றந்திரத்தின் - அங்கமுமணியுமென்னுமதிரதநிலையுந்தேர்ந்து - சங்கையில்லாமலொற்றித்தருதிரென்றுரைத்துப்பின்னர் - அங்கவர்தமைவிடுத்தேயசுரர்கோனினைவிளைந்தான். ௭௰

சாரதர்தலைக்கணேகச்சண்முகன்சேனையோடும் - எரணிபரமன்வாழ்கேதாரமற்றிணையில்காசி - நாரணிபருப்பதந்தன்னலங்கொள்வேங்கடமங்கானகாரணிந்துலவுமேலைக்காளத்திவரையுங்கண்டான். ௭௧

வடவனம்புனிதகாஞ்சிவந்துமெய்த்தலங்கள்கண்டு - தடமலியருணைகண்ணித்தங்குசீர்வெண்ணெய்சார்ந்து - படிபுகழ்முதுகுன்றத்துப்பரமனைப்பணிந்துதொண்டர் - அடியர்வாழ்புலியூர்த்தில்லையம்பலம்பரவினானே. ௭௨

மண்ணியங்கரையினண்ணிமாலயன்முதலாந்தேவர் - உண்மகிழ்ந்தன்பினாற்றும்பூசனைக்குவந்துசெவ்வேள் - புண்ணியன்றந்தைதன்பாற்பொருவில்வான்படையும்பெற்றுக் - கண்ணகனூர்புக்குக்கடுஞ்சுரப்பாலைசென்றான்.

முருகவேளங்கணெய்தமுளரியம்பாலைக்கானம் - அருமைசான்மருதமாயிற்றனையவன்பராசரன்றன் - பெருமகார்க்கருளுநல்கிப்பிறங்குபல்சேனைசூழத் - திருவளர்செயந்திசென்றங்கினகரம்புனைவித்துற்றான். ௭௪

சூர்முதலானவீரர்தொல்லுலகுதித்தவாறும் - பேர்திகழ்வரமுஞ்சீரும்பெருமையும்யாவுமங்கட் - சீர்தருவியாழனையன்றிருவருணிலையிற்செப்ப - நேர்வருநிமலன்வீரவாகுவுக்கிவைநிகழ்த்தும். ௭௱௫

**வேறு.** அல்லுறழுமிடற்றரனருள்வரத்தாலண்டமெனுமாயிரத்தெட்டவனியெல்லாம் - பல்லுகமாண்டமரர்தமையேவல்கொண்டபோகசாதனியினெடுமெமரர்மாதர் - சொல்லரியதுயருழப்பத்தொழும்பினேற்றித்துணிபுரிந்துவதைத்தவனுஞ்சூரபத்மன் - தொல்லைவளமகேந்திரத்திற்றாதுசென்றசுரர்சிறையைவிடப்புகன்றசுருதிதோய்ந்த. ௭௱௬

நீதிநெறிப்படியொழுகிற்சூரிடத்தினிலவுநமசருளென்றுநிகழ்த்தியந்தமேதகையதுறைதிறம்பியொழுகுமாயின்- விரைந்தவனுமடைந்துபொருஞ்சேனையோர்டுங்-கோதமிகச்செருப்படியிற்பொடியதேறக்குணலைபுரிநின்கிளையைக்கொன்றுபின்னர் - மாதிரங்கட்கிடையூறுபுரிந்தநின்னைவயவேலினாளாறின்மாய்த்துமென்றே. ௭௱௭

**வேறு.** சிவன்மகனுரைத்தனனென்றுசெப்பியே - தவநெறியெம்பிநீசாருகென்றலும் - உவமையின்முருகவேளுபயதாண்மலர் - தவலறவணங்கியேதணந்துசென்றனன். ௭௱௮

வீரவாகேகுவான்மேவல்கண்டுமால் - சூரவாகுலந்துயர்சயந்தன்றொல்சுரா - வாரவாகுறுசிறைவைகுவாரவர் - தேரவாகுனைசொலிச்செல்லுகென்றனன்.

ஆங்கரிமொழிக்கிசைந்தாடன்மொய்ம்பினன் - வீங்கியசந்தனவெற்பின்மேவியே - ஓங்கியகுகனருளுன்னிச்சூர்வளந் - தேங்கியமகேந்திரஞ்செல்லமுன்னினான். ௭௧௦

சந்தனவரையெழீஇச்சலதிகீழ்புக - முந்தியகைவிசைமுகிலைக்கீண்டுற - அந்தரத்தேகியேயாளிமீதுயர் - சுந்தரவிலங்கைமால்வரையிற்றுன்னினான்.

நீடியவீரசிங்காதிநீசரைச் - சாடினன்வளனெலாந்தனிதெரிந்துபின் - பாடுறுநெறிசெலாப்பானுகோபனை - டாடலார்வீரர்தமணியிருக்கையும். ௭௧௨

கண்டனன்வியந்தனன்கண்ணொராயிரங் - கொண்டவன்மகனுறுகொடியசாலையை - அண்டலுமாங்கனமசுரகாவலர் - சண்டனிற்சயந்தனைத்தேவர்தம்மையே. ௭௧௩

வெருவரப்புடைத்தனர்வேல்கொடோச்சினர் - அரியுடன்புலோமசையாண்டையாரெனப் - பெருநகையாகவேபேசிவைதனர் - உரைதருமசுரரென்றுரைக்குநீசரே. ௭௧௪

ஆங்கவர்கொடுஞ்செயலனைத்துமாற்றலாற் - பாங்குறுபடைக்கரம்பாறச்சோர்ந்தனர் - ஈங்கிவரமரரென்றெள்ளிநீக்கரு - ஞாங்கரிற்கொடுஞ்சிறைநண்ணவைத்தனர். ௭௧௫

சயந்தனேயாதியாச்சாற்றும்வானவர் - அயர்ந்தனரழுதனரலமர்தேங்கின
ர் - வியந்துலகளித்தருள்விமலற்போற்றினர் - சயந்தமாம்பேரோரீஇத்தயங்கி
த்துஞ்சினர். ௭௫௬

**வேறு.** அந்தநல்லமயர்தன்னிலூறிருதடந்தோளண்ணல் - இந்திரன்றலை
தேவரெய்தியகனவின்கண்ணே - வந்தனனருள்புரிந்துவருந்தலிருயர்வலாரி -
முந்திமான்முதலோர்கூடநம்மிடமுடுகியுற்றார். ௭௫௭

**வேறு.** சசிகுருமனையினுற்றாடாரகன்சமரிற்சாய்ந்தான் - நிசிசரர்கிளையையி
ன்னேநேடொருபத்துநாளிற் - றிசையெலாமதிக்கச்செற்றுத்திசைமுகனுதி
வானோர் - வசையழித்தும்மைமீட்டும்வருந்தலிரென்றானையன். ௭௫௮

நனவுநீர்கண்ணும்போதுநமதுதூதுவனும்வந்து - புனைநுமதரக்கிதமாற்
றிப்போவனவ்வுண்மையாலே - கனைகழற்புலவீர்யாஞ்சொல்கட்டுரைப்படியே
யாகும் - எனமனத்துணர்வீரென்றுவிறைகனவினிற்கரந்தான். ௭௫௯

ஆவனகண்டதேவரருநனவுற்றகாலை- மூவிருமுகத்துவள்ளன்மொழிபொ
ருண்மெய்ம்மைதேறி - ஓவருமகிழ்ச்சியுற்றாருவரிடம்வீரவாகு - மேவியங்கவ
ைத்தேற்றிவியன்மகேந்திரத்துட்புக்கான். ௭௬௦

**வேறு.** அன்னகர்வளனெலாமையனோக்கியே - பொன்னவிர்சூசிகைப்பொலி
ந்துசூரனும் - மன்னவன்பேரவைவனப்புமாங்கவன் - பன்னருமுருவமும்பரிந்
துநோக்கினான். ௭௬௧

**வேறு.** அளக்கருஞ்சூரன்முன்னராரழல்வேள்வியாற்றிக்- களக்கறையரனிட
த்திற்கணிப்பினல்வரங்களெல்லாந்- தளற்கரும்படியேபெற்றுச்சகமுதலண்ட
மெங்கும் - விளக்குமெய்யரசும்வாழ்வுமேவியிங்கினிதிருற்றான். ௭௬௨

தேவரைவருத்திவீடாச்சிறையிடைப்படுத்திமுன்னாட் - பூவுலகுயிரினுக
கும்புகலருந்தீமைசெய்தான் - ஆவிவனவர்களோடுமறத்தையுங்கடிந்திட்டா
னே - தேவர்கட்கிழைத்ததீங்குதிண்ணமிங்கிவனைக்கொல்லும். ௭௬௩

எனவிவைமனத்தின்முன்னியெழுந்துவிண்ணெறியிற்சென்று - புனை
கழற்குகனுமண்ணல்பொன்னடிசிந்தையேற்றி - அனுசனங்கருவாய்ச்சூரன
வையிடைதாவித்தொல்லை - வினையுணர்ந்துருவமேனிவெளிப்படவிளங்கி
ன்றான். ௭௬௪

கந்தவேளருளுந்தூதன்கலனிசாசரன்முனின்று - வந்தகாரியமுரைத்தல்
வசையெனுமுருகவேளைச் - சிந்தனைசெய்தகாலைச்சேணிடைத்திகழ்ந்தோர்பீ
ட - முந்துறுசூரபத்மன்முதுசபைப்பொலிந்ததன்றே. ௭௬௫

அதனிடைவீரன்வைகவசுரர்கண்டதிசயித்தே - இதமல்பீடமீதினிங்
ஙனமிவனிருந்தான் - புதுமையேயன்றியுண்டோபுகலுவதென்னச்சூரன் - கது
மெனச்சிற்றமூண்டுகரதலம்புடைத்தாக்கான். ௭௬௬

பற்றெலாந்துறந்துகானிற்பயின்றிலைசருகருந்தி - உற்றிடுபேதையோர்
ளுஞற்றிடுஞ்சாலவித்தை - கற்றுளாய்கொல்லோநம்முன்காட்டினைமதியி
லாய் - இற்றிதற்குனதுசிவன்யான்பரிசாகத்தர்தேன். ௭

தேவருமிந்தவண்ணஞ்செய்திடார்வணங்கிநிற்பார் யாவனீயென்னலோடுமிமையவர்சிறையைமீட்க - மூவிருமுகன்குறித்தமொழிசொலத்தூதாவந்தேன் - எவரும்புரவும்வீரவாகுயானென்றுரைனயன். எசுஅ

தூதுநீவந்ததீதிசொல்கெனநகைக்கச்சூரன் - மேதகுசுரரைக்கொண்டவியன்சிறைவிடுத்தியென்றே - ஓதிடவுரைத்தானையனுணர்ந்திதுபுரிந்திலாயேன் - மீதொளிர்செல்வமாண்மையியன்கிளையனைத்தும்வீய. எசுகூ

தினமொருபஃதினுள்ளேசெருச்செயவருதுஞ்சூர - னினைவெனென்றறிந்துசேறியெனவிவண்யான்புகுந்தேன் - அனைவராம்விருத்தர்பாலரரிவையர்முனிவர்தேவர் - மனநயத்துயரஞ்செய்வோர்மாள்வது திண்ணமன்று. எஎ௦

**வேறு.** வச்சிரயாக்கையும்வளனுமெய்தியே - முச்சகப்புவனமும்முறைபுரிந்துநின் - நிச்சயமேன்மையைநிலையில்புன்செயற் - கிச்சைவைத்திகத்தன்மற்றினியசிரதோ. எஎக

பாகசாதனிமுதற்பகருந்தேவராம் - மாகர்தஞ்சிறையினைமாற்றிக்கந்தவேள் - சேகுறுபதமலர்சென்னிசேர்த்தியே - நாகமங்கவர்கொளநயந்தளித்தியால்.

**வேறு.** பொறுமைநல்வாய்மைநீதிபுனிதமெய்த்தேவநேசம் - அறிவருளாதரங்களாருயிர்த்துணையாக்கொண்டே - மறவறப்புரத்தியண்டமன்னநீயென்னலோடு - முறுவலுஞ்சினமுமேறமுடித்தலைதுளக்கிச்சொல்வான். எஎஉ

பற்றலராகிநம்மோர்கிளையெலாம்பதைப்பவாட்டிச் - செற்றனர்தேவரன்னசெயன்முறையவர்வளங்கண் - முற்றவுமழித்துமேலுமுரட்படைதொலையவீடாப் - பெற்றியிற்சிறையினிட்டேன்பேசியென்பயனீபேதாய். எஎச

பேடியினொழுக்கமென்னப்பெண்ணொடுமறைந்தகற்ப - நாடனைக்கண்டேனுயினலித்தொருநாளும்வீடாக் - கேடுளசிறையினுய்ப்பன்கிடைத்ததைவிடுவர்யாரோ - தேடரும்பரமனல்கும்வரத்தியறெரிந்திலாய்நீ. எஎரு

**வேறு.** வச்சிரத்தேகமும்மாசில்செல்வமும் - இச்சையிற்பெற்றவென்னேற்றந்தேறலாய் - கொச்சகத்தியன்மொழிக்குழந்தைசொல்லினை - அச்செனமதித்தனையறிவில்புந்தியோய். எஎசு

சிந்துரமுகன்பொருந்தேவர்சூழ்வினை - முந்துறவறிகிலான்முரணின்மாய்ந்தனன் - வெந்திறற்படையுடன்வீரம்யாவையும் - அந்திநேர்வண்ணனன்றவர்க்களித்திலான். எஎஎ

அப்பழிமுடிப்பயானனிகஞ்சூழ்வரத் - துப்புடனெழுதலுந்துகளிறேர்ச்சியோர் - முப்புவனத்துளமுதன்மைபெற்றநீ - தப்படிக்குழந்தைபாற்சமர்க்குப்போதியோ. எஎஅ

ஆங்கவன்கருத்தினையறிந்துபின்னரே - பாங்குறபபுரிகெனப்பாணித்துய்த்திட - வீங்கியபேரொலிவெய்யதூதனா - ஆங்கவர்கடல்கடந்தவனியெய்தினர்.

எண்ணுநந்துணிபைநிற்கிசைக்கினென்பயன் - விண்ணவர்சிறையினைவிடுத்தலில்லைநீ - பண்ணிசைச்செம்மல்பாற்படர்ந்துரைக்கெனத் - துண்ணெனவீரனுமினையசொல்லுவான். எஅ௦

மெய்வழியுணர்கிலையுறுதிவேண்டிலை- உய்வழிசொற்றனனுளத்திற்கொ
ண்டிலை - நொய்வழியனல்புனல்கால்விண்மண்ணொடு - செய்வழிமுழுமுதற்சி
வகலைச்சுடர். எஅக

உலகுயிருய்யவந்துதித்துச்சூரனின் - குலமெலாம்விளித்துவான்குடிபுரந்தி
ட- இலகியபாலனைவெய்திமுன்னரே- நலமலிதம்பியைநகத்தைமாய்த்தனன்.

இன்னுநீநல்லுணர்வெய்திவாழ்திகொல் - என்னவிங்கென்னையொற்றுக
வித்தலைத் - துன்னுவித்தனன்பரஞ்சுதனுநீயவன் - பொன்னடிசரணெனப்
போற்றிசெய்தியால். எஅங

**வேறு.** என்றேநலனுரைகூறலுமிகல்விஞ்சியசூரன் - நன்றேயெனநகையாடி
னனஞ்சிற்கழிசுளியா - மின்றோய்ப்புயரோராயிரவிறல்விஞ்சியதிறலோர் - அ
ன்றூருயிர்நிலையோர்தமையசனிக்கிணையாக. எஅச

பாலன்விடுதூதென்றுளம்பரிந்தேயொளிர்குழகன் - சிலம்புசுழினுமேலு
ளைதெரிவன்னிவற்பிடித்தோர் - காலங்கழியாவன்சிறைகடவும்மெனவால -
காலந்தீனேரத்திறற்கடவுண்முனருற்றார். எஅரு

கண்டான்விறன்மொய்ம்பன்னவர்கவினுயிரமுடியுந் - தண்டாதொருகை
தாவின்றடமார்படிகரமுந் - துண்டாகவெபுவிமோதினன்சூர்முன்னுறவீசி-
எண்டாரகன்முன்றோய்நனிகேளென்றிவைபகர்வான். எஅசா

குமரன்கரமிளிர்வேலுனதுயிர்கொண்டிடல்சரதம் - பமரம்பெறமுனதை
ம்பொறிபசையற்றிடவெஃகுந் - தமரம்பொருதரமுண்டனைசலியாதிருமேலா
ம் - அமரன்பதமடைவேனெனவவைநீத்தனனையன். எஅஎ

**வேறு.** அரியணையுடனேயையனந்தரத்தெழுந்துசெல்லத் - தெரிதருசூரன்வி
ட்டதிறற்சதமுகனைவாட்டிப்- புரிசையைநகளைமாட்டிப்புரிந்தகாவலனைவீட்
டிப் - புரநெடுஞ்சேனைசிந்திப்போயினன்வீரவாகு. எஅஅ

சகத்திரவாகுகொண்டசகத்திரர்த்தெற்றச்சாலப் - பகைத்தெதிர்சூரபத்
மன்பாலனும்வச்ரவாகு -மிகைத்தெழவுயிர்பறித்துவியன்புகழிலங்கைபாய்ந்து-
புகைத்தழல்யாழிவத்ரன்போர்முகமுருக்கினனே. எஅகூ

**வேறு.** வாரிதியைவாவியலைவாய்நகரடைந்து - பாருலகுயிர்க்கருள்பரம்பொ
ருண்முனண்ணிச் - சூரனினைவின்சுவடுசொற்றருணலத்தாற் - சேரும்விற
லோருயிர்செறுத்ததுமிறுத்தான். எகூ0

கந்தனிதயத்தருள்கசிந்துகமலக்கண் - அந்தரசுராதியர்களாவாயுமலைக்கு
ந் - தொந்தவினைதங்கிவளர்சூரமர்தொலைப்பான் - நந்தமணிகங்கடவிநண்ணிடு
துமென்றான். எகூக

வாரிதிகடந்துதனைவந்தவுணவேயர் - ஆரணமுதற்கடவுளாறிருபுயத்த
ன் - சீரணிதிறற்படைசெயம்புகழ்தெரிந்தே - சூரன்முனுரைத்தனர்துளக்க
றவிரித்தே. எகூஉ

சூரனுமகன்சமர்துணிந்ததுமுணர்ந்தான் - பேரனுருழந்தரசதன்மநெறி பேணி - வீரன்விறலாலழிபுரம்பினர்விதித்தே - எரொழியமைச்சரிலிருந்துச வினானே. எகூங

வேறு. சாரதகணத்தர்சூழச்சண்முகவரதமேலோன் - வாரிதிகடந்துபோந்து மகேந்திரவடபாலெய்திப் - பேரெழிலேமகூடப்பெரும்பதியனலாக்கிச் - சேருறுபொழுதிற்சூரன்றெளிந்தனனொற்றர்செப்ப. எகூச

நாரதன்மொழியினானுநகைகெழுசூரன்றேர்ந்து - பாருலகாதியேங்கிப்ப தைபதைத்துயிர்ப்புவீங்கச் - சூரியன்பகையைப்போர்க்குத்தூண்டினன்குமர மூர்த்தி - வீரனால்வயமுருக்கவெரின்கொடுத்தவனுமீண்டான். எகூரு

கசரதமுதலாஞ்சேனைக்கடலொடுஞ்சூரனேர - விசயமும்புகழுமன்னோன் விழுமமும்விறலும்வீட்டி - அசைவிலெப்பொருளாமண்ணலவன்றனையிரித்து விண்ணூர் - திசையெலாம்புகழ்ந்துபோற்றத்திருந்துபாசறையிற்சென்றான்.

வேறு. அருக்கபகைசமர்செருக்குபடையுடனடுத்ததினமமர்தொடுத்துவயவ ளை - முருக்கிவிறல்செறிதிருக்கையிளவலைமுடுக்கிமயல்சயிறடுக்கிமிகுகடல் - பெருக்கவிடமிளிர்குருக்கைவடியயில்பிடித்தபிணிதெறவிடித்தகுரலொடு - த ருக்குகணகிளைபுரக்கவருமவர்சடக்கெனுளையிறமுடிக்கநகரியே. எகூஎ

வேறு. விரவுமசுரனெரிமுகனையமர்செயவிடவுமவனொருடல்விறலதிபனட- உரியவிரணியனுமெமர்களொடுபொருதுவரிபுகுதமிகுமுலகமுடிவெனப் - பெ ரியவசுரபதிபுதல்வருயிர்நெகபிரதமதியினர்களிரணகளமிறக் கருதுபரிதிப கைவிருதுபுயவலிகளரியொடியவவனுடலுமுடியவே. எகூஅ

வேறு. பாசனநற்புதல்வர்மதிமந்திரத்தர் பலர்மடியநெடியதுயர்படைத்துமா னும் - நீசனுயிர்நிகர்சிங்கமுகனைவெம்போர்நீபுரிகவெனவிடுப்பநிமலமூர்த்தி - வீசுசரமழைபொழிந்துசேனையாவும்வென்றருளிச்சிங்கமுகவீரன்றன்னைத்-தே சுநிறைசதகோடிவிடுத்தடர்த்துச்சிங்கவாகனந்தனக்காச்சேர்த்தினானே. எகூகூ

புடவியுறுமண்டரண்டத்திடைபரந்தபுயவலிகொடானவராம்புணரியோடு ங்- கடியமனத்திடனுடையசூரபத்மன்கருதரியசமர்முகத்துக்கலந்தபோதின் - அடியவர்கட்கருள்குரவனறுமுகத்தனடல்கொளீராறுபுயனணிகுலாவும் - பொ டிபுனையுந்திருமார்பன்பவனனூரும்பொற்றேரின்மீதமர்க்குப்புகுந்தானன்றே

சாரதர்பற்பலமரங்கள்வானளாவுஞ்சயிலமுடன்முசலமெழுத்தரித்துச்சூ ழ - வீரர்தங்கடலைவருடனொன்பான்வீரர்மிடைந்துவரச்சயம்படைத்தவீரவா கின் - ஆருலவுந்தேர்வரவையசுரர்கண்டேயார்ப்பரித்துப்படைவழங்கவமலன் பாங்கர்ச் - சார்வயவெங்குறட்சேனையூபம்பாறச்சண்முகன்றன்பின்னோனுந்த ளம்பினானே. அ0க

சதுமுகனுமாயிரங்கணிந்திரன்றானுந்தானமுறைவானவருஞ்சலசமேவு ம் - புதியமதிமுகத்தருணவிந்திரைசேரும்புனிதனடியிணைபணிந்துபுவனமெ ங்கும் - விதனமியற்றசுரர்தமர்நிறைந்தாரந்தோவெய்யமனச்சூரென்றவீயுமெங்

கள் - பதமரசசெல்வமவையெந்தஞான்றெம்பாங்குறாஉமுறைத்தருளெம்பரம வென்றார். அ௦௨

